பக்கங்கள்: 12 விலை : 30/-


# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 20 வெள்ளிக்கிழமை 02.04.2021 கதிர் 148

### இனி அது ரகசியம் அல்ல!

மன்னார் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நம்மைப் பிரிந்து விட்டார். தமிழினமே அத்துயரத்தில் மூழ்கியிருக்கும் இச்சமயத்தில் அவரது நினைவு தொடர்பாக ஒரு சம்பவத்தைப் பகிர்வதுடன் இன்றைய பத்தியை முடித்துக்

பக்கம்02 »



### பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சர்வதேசத்திடம்

# நீதி வேண்டி வாதிட்ட சாட்சியம் ஆயர் இராயப்பு ஜோசப் மறைவு

## திருவுடல் திங்கள் மன்னாரில் அடக்கம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 02

தமிழ் மக்களின் உரிமைக்காக – விடுதலைக்காக அயராது குரல் கொடுத்த – தமிழினத்தின் மிகப் பெரிய சாட்சியாக இருந்த மன்னார் மறை மாவட்டத்தின் ஒய்வுநிலை ஆயர் அருட்திரு கலா நிதி இராயப்பு ஜோசப் காலமானார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த அவர், தனது 81ஆவது வயதில் நேற்றுக் காலை 06.30 மணியளவில் காலமானார் என்று மன்னார் ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

☞ 2

## மட்டு. மாநகர ஆணையருக்கு எதிராக இடைக்காலத் தடை

### மேயரின் மனுவை ஏற்று நீதிமன்று வழங்கியது

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வரினால் சபை அனுமதியுடன் பிரதி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தில் ஆணையாளர் தலையிடுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர மேயரால், ஆணையாளருக்கு எதிராக இடைக்கால தடை எழுத்தாணை கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல்

☞ 2

## மரியசேவியர் அடிகளாரும் பிரிந்தார்



யாழ்.மறை மாவட்ட குருவும் திருமறைக் கலா மன்றம் ஸ்தாபகரும், இயக்குநருமான அருட் கலாநிதி நீ.மரியசேவியர்

☞ 2

## மேலும் 23 பேருக்கு நேற்று யாழில் தொற்று

யாழ்.குடாநாட்டில் நேற்றைய தினம் கொரோனாத் தொற்று உறுதியான 23 பேரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இன்றைய தினம் 325 பேருக்கு பரிசோதனை மேற்கொண்டதில் எண்மருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார அதிகாரி பிரிவில் 4 பேர்,

☞ 2

## மனைவியைக் கொலைசெய்துவிட்டு தானும் தற்கொலை செய்த கணவன்



### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராமத்தில், மூன்று பிள்ளைகளின் தந்தை தனது மனைவியைக் கொலை செய்து விட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல்

☞ 2

## மேலும் நான்கு பேரை கைதுசெய்தது ரி.ஐ.டி.

அடிப்படைவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மேலும் நான்கு பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு, வெல்லம்பிட்டி மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் இருவர் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் ஹசீம், தாக்குதலுக்கு முன்னர் சில நபர்களுடன் உறுதிமொழி எடுக்கும் வீடியோவை இணையத்தளங்களில்

☞ 12

### பிணைமுறி மோசடி:

## ரவி உள்ளிட்ட 7 பேர் பிணையில் விடுப்பு



மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேருக்கு கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

☞ 2

## ஓட்டோ மீது லொறி குடைசாய்வு; 3 பெண்கள் நசுங்குண்டு மரணம்



நுவரெலியா – பதுளை பிரதான வீதியின் ஹக்கல பூங்காவுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

வீதியில் பயணித்த கொள்கலன் வாகனம், ஓட்டோ ஒன்றின் மீது குடைசாய்ந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஓட்டோவில் பயணித்த பண்டாரவளை – எல்ல பகுதியைச் சேர்ந்த 18, 51

☞ 2

# சர்வதேச நாடுகள் எம்மைத் துரத்தினாலும் பொறியில் நாம் சிக்கிக்கொள்ள மாட்டோம்



## அமைச்சர் விமல் வீறாப்புப் பேச்சு

நல்லாட்சி அரசின் கொள்கையில் பயணித்து ஜெனிவா நெருக்கடிகளைச் சமாளிக்க நாம் ஆட்சிக்கு வரவில்லை. எமக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், இராணுவக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து சர்வதேச நாடுகள் எம்மைத் துரத்தினாலும் அவர்களின் பொறியில் நாம் சிக்கிக் கொள்ள மாட்டோம்.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜெனிவாத் தீர்மானம் இலங்கைக்கு ஒருபோதும் ஆரோக்கியமான ஒன்றல்ல. அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் எமது நாட்டின் இராணுவத்தைத் தண்டிக்கவும், நாட்டைத் துண்டாடவும் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும்.

அப்போதைய

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளலாம் என நினைக்கிறேன்.

ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்னர் இந்த நினைவை இப்பத்தியில் பகிர்ந்த ஞாபகமுண்டு. எனினும் இது பொருத்தமான சமயம் – மீள் பதிவுக்கு.

இயேசு பாலகனை சமாதானப் பிரபு என்பர். போரையும் அழிவையும் தவிர்த்து அமைதியையும் சமாதானத்தையும், அன்பையுமே மதங்கள் போதிக்கின்றன. மத போதகர்கள் அதனையே தலையாய பணியாக முன்னெடுக்கின்றனர்; முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், தெற்கில் வேறுவிதமாக நடக்கின்றது. அது வேறு விடயம். மதமும் மத போதகர்களும் மதம் பிடித்து நிற்கின்றமையை அங்கு காண்கின்றோம்.

இயேசு பிரான் வழியில் உண்மையில் சமதானத்துக்காக – நீதிக்காக – குரல் எழுப்பியவர் நம் ஆயர். சமாதானத்தை எட்டுவதற்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தார் அவர். அதை விளக்கும் சம்பவம் இது.

யுத்தம் வெடித்த கால காட்டத்தில் – 1990 முதல் – மடு அன்னை திருத்தலம் சமாதான வலயமாகவும் பாதுகாப்பு மற்றும் சூனியப் பிரதேசமாகவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டு பேணப்பட்டு வந்தது. அச்சமயம், மடுத்திருத்தலப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்திருந்த போதிலும் அந்த ஆலயச் சுற்றாடலுக்குள் புலிகளின் படையணிகள் ஆயுதங்களுடன் பிரவேசிப்பதுமில்லை, அச்சுற்றாடலில் நடமாடுவதும் இல்லை என்ற நிலைமை நிலவியது.

இடம்பெயர்ந்த பல்லாயிரம் அகதிகளுக்கு மடு அன்னையின் திருத்தலமும் சுற்றாடலும் புகலிடம் வழங்கியிருந்தன. நீண்ட கால உடன்பாட்டை மீறி 1999 மே மாதத்தில் – அங்கு 'ஆயுதங்கள் இல்லை; சீருடைகள் இல்லை' என்ற இணக்கத்தை மீறி – மடுத் திருத்தலப் பிரதேசத்தை அதிரடியாகக் கைப்பற்றின இலங்கைப் படைகள்.

அதே வருடம் 1999 நவம்பரில் இராணுவத்தினரின் பிடியில் இருந்து மடுவை மீட்பதற்கான அதிரடி நகர்வை புலிகள் ஆரம்பித்தனர். இடைநடுவில் சுமார் மூவாயிரம் அகதிகள் சிக்குண்டு பேரவலப்படும் நிலைமை.

ஆயரினதும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினதும் தீவிர முயற்சிகளை அடுத்து மடுத் தேவாயலச் சுற்றாடலில் இருந்து இராணுவம் வெளியேறியது.

நவம்பர் 20ஆம் திகதி மீண்டும் மடுத் திருப்பதியை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் படை நகர்வை ஆரம்பித்தன அரச படைகள்.

திடீரென தேவாயலப் பகுதியில் வந்து வீழ்ந்த ஷெல்களினால், 13 சிறுவர்கள் உட்பட 40 அகதிகள் உயிரிழந்தனர். அறுபது பேர் வரை படுகாயமடைந்தனர். சம்பவத்தினால் மடுத்திருப்பதியே அல்லோல கல்லோலப்பட்டது. அதிர்ந்து போனார் ஆயர் இராயப்பு யோசப்.

இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டார். 'திருப்பதியைத் தாக்காதீர்கள்!' என்று மன்றாடினார். 'மடுத் திருப்பதி சுற்றாடலில் புலிகள் நிலை கொண்டுள்ளனர். அதனால்தான் தாக்கினோம், அவர்களை அகற்றுங்கள்!' என்ற சாரப்பட ஆயருக்கு செய்தி அனுப்பப்பட்டது.

மடுத் திருப்பதியில் என்ன நடந்தது என்று கண்டறிந்து ஆயருக்கு ஆறுதல் தெரிவிப்பதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் வந்தார். மடுத்திருப்பதி ஆலயப் பரிபாலகரின் விடுதியை ஒட்டிய வராந்தாவில் சந்திப்பு நடைபெற்றது. கரிகாலனைக் கண்டதும் அவர் காலில் திடீரென வீழ்ந்தார் ஆயர் இராயப்பு யோசப். 'தயவு செய்து மடு அன்னை திருப்பதி பிரதேசத்தை சமாதான பிரதேசமாக – அமைதி வலயமாக – இருக்க அனுமதியுங்கள்! இங்கு உங்கள் பிரசன்னமும் வேண்டாம், படையினர் பிரசன்னமும் வேண்டாம். விலகியிருங்கள்!' – என்று மன்றாடினார் அவர். ஆயர் காலில் விழுந்ததும் பதறிப் போனார் கரிகாலன். ஆயர் கூறிய செய்தியுடன் புலிகளின் தலைமையிடம் விரைந்தார். ஆலயப் பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டம் இருக்காது என்ற உறுதிமொழி அதே வேகத்தில் வந்தது.

அமைதிக்காக – சமாதானத்துக்காக – எதையும் செய்யத் தயாராக இருந்த அரும்பணியாளன் நம் ஆயர்.

தன் மக்களைக் காப்பதற்காக தன்னையே அளிக்கத் தயங்காதவன்தானே நல்ல மேய்ப்பன்...!

ஓர் உயரிய – சீலம் மிக்க – மேய்ப்பனைத் தமிழினம் இன்று இழந்து விட்டது.

தமிழ்த் தலைவர்களை ஒன்றிணைக்கும் தனித்துவ ஆளுமை இப்போது நீங்காத் துயில் கொண்டு விட்டது.

தந்தை செல்வா, அன்னை இந்திரா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்று எமக்கு எந்தெந்தத் தலைவர்கள் எந்தெந்தச் சமயத்தில் அவசியமாகத் தேவைப்பட்டார்களோ, அந்தந்தச் சமயங்களில் அவர்களைப் பறிகொடுப்பதே தமிழினத்தின் தலைவிதி. யாரிடம் நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்?

விதியே, விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்...?

– மின்னல் –

## நீதி வேண்டி வாதிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி யாழ்.நெடுந்தீவில் பிறந்த இராயப்பு ஜோசப், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

கண்டி தேசிய குருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 1967ஆம் ஆண்டில் யாழ். மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இராயப்பு ஜோசப், 1992 ஆம் ஆண்டில் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றார்.

தொடர்ச்சியாக 25 வருடங்களாக மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் மக்களுக்குப் பெரும் சேவைகளை ஆற்றினார்.

அத்துடன் தமிழ் மக்களின் உரிமைக்காக அவர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தார். இலங்கை அரசாலும், அதன் படைகளாலும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் எதிராகப் போராடினார். தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுறுதி கொண்ட அவர், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஐ.நாவிடம் நீதியைக் கோரி நின்றார். இலங்கை மீது சர்வதேச விசாரணைக்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்தார்.

ஈழத்தமிழர் வரலாற்றில் அயராது உழைத்த இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் உலகத் தமிழர்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

அவரின் உடல் அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அங்கு யாழ்.மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர் ஆகியோர் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மதகுருமார், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்று மதியம் மன்னாருக்கு அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை அவரது இறுதித் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

## மனைவியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது என அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மனைவியைக் கழுத்தை நெறித்துக் கணவன் கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 38 வயதுடைய வேலாயுதம் சிவஞானம் என்பவரும், அவரது மனை வியான 36 வயதுடைய சிவஞானம்குகனேஸ்வரியென்வரும் இறந்துள்ளனர்.

இவர்களுக்கு 16 வயதில் மகளும், 13 மற்றும் 06 வயதில் இரண்டு மகன்களும் உள்ளனனர். பெற்றோரின் மரணத்தால் மூன்று பிள்ளைகளும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மரியசேவியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை இறைபதம் அடைந்து விட்டார். 82 வயதான அவர் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

மரியசேவியர் அடிகள் யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த கலைஞர், புலவர், சமயப் போதகர். இவர் ஆரம்பக் கல்வியை இளவாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் அதன் பின்னர் சென் ஹென்றிஸ் கல்லூரியிலும் கற்றார். இவர் தன் வாழ்வைக் குருத்துவப் பணியில் அர்ப்பணிக்கும் பொருட்டு 1952ஆம் ஆண்டு யாழ்.மருதனார் குருமடத்தில் சேர்ந்து சம்பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1956 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி.பரீட்சையில் சித்தியடைந்து, குருத்துவ மேல் நிலைப்படிப்பைக் கண்டி அம்பிட்டிய குருமடத்தில் தொடர்ந்தார்.

இவர் 1958 ஆம் ஆண்டு இசையியலில் உயர் பட்டம் பெறும் பொருட்டு ரோம் நகருக்குச் சென்று தனது 21 ஆவது வயதில் பி.ஏ, எம்.ஏ.பட்டங்களைப் பெற்றதுடன் உரோம் தமிழ்ச் சங்கத் தலைவராக 1960 – 1961 ஆம் ஆண்டு பணிபுரிந்தார். இவர் ஒருவர்தான் பட்டப் படிப்பின் இறுதி ஆண்டில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் முழுப்புள்ளிகளையும் பெற்றுப் பாராட்டுப்பெற்றவர். இவர் 1962 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி ரோம் நகரில் தனது 22 ஆவது வயதில் திருச்சபைச் சட்டத்தின்படி வயதுக்குறைவால் பரிசுத்த தந்தை 23 ஆம் அருளப்பரின் சிறப்பு அனுமதியுடன் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

இவர் பதினைந்து வயதில் எழுதிய மலருந் தமிழகமே மறந்து விடாதே என்னும் கட்டுரை கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மலரில் வெளிவந்தது. இவர் பத்திரிசியார் கல்லூரியில் பயிலும் காலத்தில் இறுதியாண்டு மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். சிறுவயது முதல் நாடகங்களில் நடித்துவந்த இவர், 1966 ஆம் ஆண்டு உரும்பராயில் 'திருமறைக் கலாமன்றம்' என்ற அமைப்பை நிறுவி 'காட்டிக் கொடுத்தவன்', 'பலிக்களம்', 'நல்லதங்காள்', 'நெஞ்சக்கனல்', 'நீ ஒரு பாதை', 'யூதகுமாரி' முதலான பல நாடகங்களை உள்ளூரிலும் ஐரோப்பிய தேசங்களிலும் மேடையேற்றினார்.

இவ் அமைப்பினூடாக

☞ 12

## ரவி உள்ளிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2016 ஆம் ஆண்டில் மத்திய வங்கி பிணைமுறி ஏலத்தின்போது, அரசுக்கு 3 ஆயிரத்து 698 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர் எனத் தெரிவித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக சட்டமா அதிபரினால் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு, கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கடந்த மார்ச் 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டபோது, வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை கோரிக்கை தொடர்பிலும் பிணை வழங்க வேண்டாம் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த கோரிக்கை தொடர்பிலுமான உத்தரவு நேற்று அறிவிக்கப்படும் என நீதிபதிகள் குழாம் அறிவித்திருந்தது.

இதற்கமைய நேற்று பிணை வழங்குவது தொடர்பான கோரிக்கை ஆராய்ந்த அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்ய பட்டபெதிகே ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேருக்கு பிணை வழங்கியுள்ளது.

இதேவேளை இவர்கள் 7 பேருக்கும் வெளிநாட்டு பயண தடையை விதிப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## ஓட்டோ மீது லொறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் 52 வயதுடைய மூன்று பெண்கள் ஓட்டோவுக்குள் நசுங்குண்டு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன எனவும், கொழும்பில் இருந்து அதிக சுமையுடன் வரும் வாகனங்களே அதிகளவில் விபத்துக்கு உள்ளாகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மேலும் 23 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் 02 பேர், சங்கானை 02 பேர்.

இதேவேளை, யாழ்.போதனா ஆய்வு கூடத் தில் 453 பேருக்கு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டதில் 15 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் – 06 பேர், தெல்லிப்பழை சுகாதார அதிகாரி பிரிவில் – 05 பேர், தெல்லிப்பழை பொது வைத்தியசாலையில் – ஒருவர், யாழ்.மாநகர சுகாதார அதிகாரி பிரிவில் – ஒருவர், கோப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் – ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் – ஒருவர்.

## மட்டு. மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மேயர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

மாநகர சட்டத்தின்படி மேயருக்கு இருக்கின்ற அதிகாரங்களை, விரும்பினால் ஆணையாளருக்கு பாரப்படுத்தலாம். அப்படியாக இந்தப் புதிய ஆணையாளர் வந்தபோது 10 அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. ஆனால், அதற்குப் பின்னர், கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி இன்னொரு சபைத் தீர்மானத்தின் மூலமாக கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன. அந்த அதிகாரங்களை சட்டப்படி மீளப்பெற்றிருந்தாலும் கூடத் தான் அதற்கு ஒழுகி நடக்கமாட்டேன் என்றும், அந்த அதிகாரங்களைத் தானே பயன்படுத்துவேன் என்றும் ஆணையாளர் விடாப்பிடியாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பதன் காரணமாக அவரை அப்படியான செயற்பாட்டில் இருந்து தவிர்ப்பதற்கும், அந்த அதிகாரங்களை அவர் உபயோகிப்பதைச் சட்டப்படியாக நிறுத்துவதற்கும் இடைக்காலத் தடை எழுத்தாணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி எம். என்.அப்துல்லா தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த தவணை இந்த வழக்கு தொடர்பான அறிவித்தல்கள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்சேபனை தொடர்பான விவாதத்தையும் இடைக்காலதடையுத்தரவு விவாதத்தையும் நீதிமன்றம் செவிமடுத்து ஜுன் மாதம் 03ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

## சர்வதேச நாடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரம் அனுமதி பெற்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

மாறாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இது குறித்து அனுமதி பெறவும் இல்லை; அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் இல்லை.

அதேபோல் ஜெனிவாவில் இந்தக் காட்டிக்கொடுப்பைச் செய்த காரணத்தால்தான், எமது இராணுவத்தில் பலர் கைதாகினர். புலனாய்வுத்துறை பலவீனப்படுத்தப்பட்டது. எம்மால் 30/1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதனை நிறைவேற்ற நாம் ஆட்சிக்கு வரவில்லை.

எமது அரசு எவருக்கும் அடிபணியாது. எமது நாட்டின் இறையாண்மை மற்றும் எமது இராணுவத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொள்கையில் நாம் பயணிக்கின்றோம்.

மேற்கத்தேய நாடுகள் கூறுவதற்கு அமைய சமாதான பாதையில் சென்று நாட்டை துண்டாடி கையில் கொடுத்தால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டிருக்கும்.

நோபல் பரிசைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்டைத் துண்டாடுவதை விடுத்து நாட்டில் சமாதானம், அமைதியை உருவாக்கிக்கொள்ள பயங்கரவாதத்தைத் தோற்கடித்த காரணத்தால்தான் இன்றும் சர்வதேசம் எம்மைத் துரத்திக்கொண்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள், இராணுவக் குற்றம் என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து சர்வதேச நாடுகள் எம்மைத் துரத்திக்கொண்டு இருந்தாலும், எம்மை நெருக்கடிக்குள் தள்ள சூழ்ச்சிகளை முன்னெடுத்தாலும் அவர்களின் பொறியில் நாம் சிக்கிக்கொள்ள மாட்டோம் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்திகள்

## தமிழருக்குப் பேரிழப்பு!

### இரங்கல் செய்தியில் சம்பந்தன்



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப்பின் மறைவானது தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஆயர் இராயப்பு ஜோசப், தமிழ் மக்களின் உரிமைக் குரலாகப் பல தசாப்தங்களாகத் திகழ்ந்தவர்.

மக்களோடு மிகவும் நெருங்கிப் பழகிய ஆயர், தமிழ் மக்களின் இக்கட்டான அனைத்துக் கட்டங்களிலும் தாம் நேசித்த மக்களுக்காக முன்னின்று போராடிய ஒருவராவார்.

இன, மத மொழிகளுக்கு அப்பால் சாதாரண மக்களின் உரிமைகளுக்காக எவ்வித தயக்கமும் பாரபட்சமும் இல்லாமல் அயராது பணியாற்றிய ஒரு தலைவரை இன்று நாம் இழந்துள்ளோம்.

மக்களின் உரிமைகளுக்காகப் போராடி மறைந்த ஆண்டகை இராயப்பு ஜோசப்பின் பிரயத்தனங்கள் மெய்ப்பட வேண்டும் என நாம் இறைவனைப் பிரார்த்திப்பதோடு, ஆண்டகையின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது உறவினர்கள், திருச்சபை மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அன்னாரது ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக!

– என்றுள்ளது.

## நீதிக்காக ஓங்கி ஒலித்த குரல்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரங்கல்



முன்னாள் மன்னார் மறை மாவட்ட பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். ஈழத்தமிழரின் உரிமைக்கான போராட்டக் காலத்திலும், போர் நிறைவு பெற்றதன் பின்னரும், ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் மக்களின் பலமான குரலாகச் செயற்பட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும், தமிழ்த் தேசிய மக்களுக்கும் ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும். தமிழ் மக்களுக்கான நீதிக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதியில் உறங்குகின்றது. தமிழ் மக்களின் உணர்வுகளுடன் கலந்து, உடலால் அமரத்துவம் அடைந்த ஆண்டகையின் ஆன்மா நித்திய அமைதி அடைவதாக!

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கை அரசு தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை இன அழிப்புப் போர் மூலம் 2009 மே 18 இல் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்க முயன்றபோது, தமிழ்த் தேசத்தில் நடைபெற்ற இன அழிப்புக்கு நீதியைக் கோரி, சர்வதேச பொறுப்புக்கூறலை எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி வலியுறுத்தி, தமிழ் சிவில் சமூக அமையத்தினூடாக ஆண்டகை தலைமையை வழங்கியிருந்தார்.

குருத்துவத்தின் புனிதத்தையும், மேன்மையையும் தாங்கி, ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் உண்மையானதும் நீதியானதுமான பொறுப்புக்கூறலுக்காக ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.


ஆண்டகையின் வெற்றிடத்தை நிரப்புவது என்பது கடினமான பணியாகும். ஈழத்து திருச்சபையின் பணியாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை ஆண்டகையின் வாழ்வும் குருத்துவமும் எடுத்துக்காட்டியுள்ளது.

இயேசு கிறிஸ்து பணிக்குருத்துவத்தை நிறுவியதை நினைவுகூரும், புனித வியாழன் நாளாகிய இன்று ஆண்டகையும் தனது தலைமைக் குருவின் திருப்பாதம் நாடிச்சென்று அமைதியில் உறங்குகின்றார்.

ஆண்டகையின் பேரிழப்பால் துயருறும் கத்தோலிக்க திருச்சபையினதும், அவரது குடும்பத்தினரதும் துயரில் ஈழத் தமிழ் மக்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாமும் பங்குகொள்கின்றோம்.

இறைவனின் உன்னத திருப்பாதம் நாடிச்சென்ற ஆண்டகை, இறைவனின் அருகில் இருந்து, விடுதலைக்காக ஏங்கும் தமிழ் தேச இனத்துக்காகப் பரிந்துபேசி, எமக்கான சக்தியை வழங்குபவராக தொடர்ந்தும் இருப்பார் என்னும் நம்பிக்கை எமக்குண்டு.

இன்றிலிருந்து ஆண்டகையின் திருவுடல் அடக்கம் செய்யப்படும் வரை தமிழ்த் தேசத்தில் துக்க நாளாக அனுஷ்டிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.– என்றுள்ளது.



## வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்பின் செயற்பாடு காலத்தால் மறவாத எழுத்து!

### இந்துசமயப் பேரவை அஞ்சலி

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப்பின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அமைகிறது.

தமிழ் நிலத்தில் நடைபெற்ற போர்சூழலில் மன்னார் மறைமாவட்ட ஆயரின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகள் காலத்தால் மறவாத எழுத்தாக ஆளப்பதிந்துள்ளது.

– இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு சார்பில் அதன் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் வெளியிட்டுள்ள இரங்கலுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நெருக்கடி மிக்க சூழலில் இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராகக் குரல் கொடுப்பவர்கள் மிகச் சிலரே. அத்தகையோரில் மறைந்த ஆயரின்பங்களிப்பு மக்கள் மத்தியில் ஆளப் பதிந்துள்ளது.

சிவபிரானின் அருட்திருக்கண்களிலொன்றான தமிழ் மொழிக்கு இன்னல் ஏற்படும் போது பொங்கி எழும் இவரது அளவற்ற துணிவிற்கு இந்து சமயப் பேரவை தலை சாய்க்கின்றது.

அவரது ஆத்மா தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு என்றும் வழிகாட்ட எல்லாம்வல்ல ஆடல்வல்லானை பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கிறிஸ்தவ மதத்தவர்களுக்கும் குறிப்பாக கிறிஸ்தவ மதத் தலைவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றுள்ளது.

## தமிழர்களின் விடுதலைப் பாதையில் ஆயரின் பங்கு மதிப்பிட முடியாததே

### வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ்



தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் மறைந்த ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை அவர்களது பங்களிப்பு மதிப்பிடப்பட முடியாதது. அவரது இழப்பிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உள்ளூராட்சி மன்றம் என்ற வகையில் உத்தியோகபூர்வமாக ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவரது இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

போரின் போதும் போருக்குப் பின்பாகவும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை நியாயமாக வெளிப்படுத்தும் நடுநிலையாளராக மறைந்த ஆயர் வணக்கத்துக்குரிய இராஜப்பு ஜோசப் ஆண்டகை செயற்பட்டார். தமிழ் மக்களுக்காக அவர் எடுத்துக்கொண்ட நீதியான வகிபாகத்தின் நிமித்தம் பல சவால்களையும் விமர்சனங்களையும் சந்தித்தார். ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு நீதியான அரசியல் தீர்வுத் திட்டத்தை வழங்கவேண்டும் என்பதில் உறுதியாகவும் உணர்வாகவும் அவர் செயற்பட்டுவந்தார்.

தமிழ்த் தேசியப் பரப்பில் மதங்களைக் கடந்து எமது மக்கள் விடுதலை அடையவேண்டும் என்ற உறுதியோடு பயணித்த உத்தமர் ஒருவரையே தமிழ் இனம் இழந்து நிற்கின்றது. தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படுவதற்காக சர்வதேச சமூகம் இறுக்கமான முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதை ஆயர் பக்கச்சார்பற்று நடு நிலையாளராக ஐ.நா. வரை வலியுறுத்தி வந்தார். அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, மீள்குடியேற்றம் என அவரது பங்களிப்பு மனித உரிமைகளுக்கு அடிப்படையானதாக அமைந்தது. இதற்கு மேலாக இராணுவமயமாக்கம், சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மதகுருமாரையும் சிவில் அமைப்புக்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட்ட ஒருவரையே நாம் இழந்து நிற்கின்றோம்.

எமது இனத்தின் மீதான ஒடுக்குமுறைகளை வெளிப்படுத்தும் உலகம் ஏற்றுக்கொண்ட ஒருவரான அவரை இழந்து தமிழினம் தவிக்கின்றது என்பதே உண்மை. அவர் போன்றவர்கள் எம் இனத்திற்குத் தீர்வு கிட்டும்வரையிலாவது இருந்திருக்க வேண்டும். அதற்குக் காலம் சந்தர்ப்பமளிக்கவில்லை. அவர் காட்டிச் சென்ற பாதையை எல்லோரும் பின்தொடரவேண்டும் என்பதே இன்றைய கடமை.

தமிழ் மக்களின் விடயங்களுக்கு அப்பால் முஸ்லிம் சமூகத்தினர் மீது முடுக்கிவிடப்பட்ட தாக்குதல்கள், சிறைகளில் சிங்கள கைதிகள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள், தொழிற் சங்கவியலாளர்கள், மாணவத் தலைவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்காகவும் எதிர்த்துப்போராடினார். ஜனநாயகக் கருத்துருவாக்கத்திலும் மனித உரிமைகளுக்காக குரலற்றவர்களுக்கான குரலாக விளங்கியமையிலும் ஆயரின் பணி அளப்பரியது. இந்நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது என்று அதன் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தந்தை, தலைவர், ஆயர்...!

*“ஆண்டவரின் ஆவி என்னுள் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், ‘சிறைபட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர்’ என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்”* (லூக்காஸ் 4:16 – 19)

– இயேசு தமது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தாம் வளர்ந்த ஊராகிய நசரேத்திற்கு வந்து ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்தில் இறைவாக்கினர் ஏசேயாவின் சுருள் ஏட்டில் வாசித்த வசனங்கள் இவை.

இந்தத் திருவாக்கையே தன் வாழ்வியல் வழிகாட்டுதலாகக் கொண்டு வாழ்ந்த ஒரு மாமனிதரை நாம் இப்போது இழந்திருக்கின்றோம்.

துன்பப்படுவோர், துயரப்படுவோர், வேதனைப்படுவோர், வேறு யாரின் துணையுமின்றி ஏதிலிகளாகக் கஷ்டப்படுவோர்பால் பரிவுடன் சேவையாற்றிய மனித மாண்பு மிக்க நம் மேய்ப்பன் மேதகு இராசப்பு யோசப் ஆண்டகை கர்த்தருக்குள் நித்திய ஜீவிதமடைந்து விட்டார்.

அவரின் ஆளுமை மிக்க – துணிச்சலான – நீதி வழியிலான – வழிப்படுத்தல் நமது தமிழ்ச் சமூகத்துக்கு அதிகம் தேவைப்படும் ஒரு கால கட்டத்தில் இறைவன் அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டமை தமிழினத்துக்கு வேதனை தரும் விடயம்.

அவரின் துறவு வாழ்க்கை, இறைசேவை, ஆன்மீக அரும்பணி ஆகியவற்றுக்கு அப்பால், அடக்கு முறையினால் முடங்கிப் போன தமிழினத்துக்கு அவர் ஆற்றிய மகத்தான சேவை பன்முகப்பட்டது. அதனை இரு வகைப்படுத்தி நோக்குவது இன்றைய கட்டத்தில் அத்தியாவசியமாகின்றது.

யுத்த காலத்திலும், யுத்தத்தின் பின்னரும் நீதியை நிலைநாட்ட வேண்டி அவர் துணிச்சலுடன் ஆற்றிய சேவை முதலாவது. அது பரந்தது. விரிந்தது. சொற்களுக்குள் அடங்கி விடா மகத்தானது.

கனன்று கொண்டிருந்த துப்பாக்கிகளுக்கும், முழங்கிக் கொண்டிருந்த பீரங்கிகளுக்கும், சீறிக் கொண்டிருந்த ஷெல்களுக்கும் மத்தியில் துணிச்சலுடன் நின்று, முரண்பட்ட இரு தரப்புகளுக்கும் நீதியை உரைக்க, நியாயத்தை நிலைநாட்ட, மனித உரிமைகளை மதிக்க ஓங்கிக்குரல் கொடுத்தவர் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை.

நீதி, நியாயம், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க உலகமே அஞ்சிய சமயத்தில் – யுத்தத்தில் வெறி கொண்டிருந்த இரு தரப்புகளுக்கும் மத்தியில் சிக்கிக் கொண்டமை போன்ற நிலைமையிலும் கூட – தம்மையே பணயம் வைத்து தைரியத்துடன் ஓங்கிக் குரல் கொடுத்த பெருந்தகை அவர்.

தன் மார்பில் தாங்கிய குருசு, எந்தக் குருஷேத்திரத்திலும் நீதியாக – கவசமாக – காவலாக – நின்று தனக்கு அரண் அளிக்கும் என்ற நேர்மை மீதான விசுவாசத்துடன் மக்கள் பணியாற்றியவர் அவர். கடைசி வரை, எந்த இக்கட்டிலும், எந்த நெருக்கடியிலும், எந்த அச்சுறுத்தலின் போதும் நீதி, நியாயத்தின் மீதான தன் பற்றுறுதி தன்னைக் காக்கும் என்று அவர் திடசங்கற்பம் கொண்டிருந்தார். அந்த விசுவாசமே அவர் வெற்றிவாழ்வின் சாட்சியம்.

யுத்தத்தின் போதும், யுத்தத்தின் பின்னரும், மனித உரிமைகளை நிலைநாட்டவும், அந்த உரிமைகளை மீறியோரை அடையாளம் கண்டு, உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் எத்தனத்தில் முழு மூச்சாகப் பணியாற்றிய அவரின் பங்களிப்பு, இன்றைய காலகட்டத்தில் பிறிதொரு பரிமாணமும் கொண்டது.

அதுவே இன்று நோக்கற்பட வேண்டிய மிக முக்கியமான அம்சம்.

தமிழர் தரப்பு சிதறுண்டு போய்க் கிடக்கின்றது. அது ஒன்றுபட்டு, ஐக்கியமாக இயங்காதா என்ற ஏக்கத்தில் ஒவ்வொரு தமிழனும் தவிக்கும் நிலைமை.

இந்த ஐக்கியத்தை மூன்று வழிகளில் ஏற்படுத்த முடியும். முதலிரண்டும் அரசியல் மார்க்கம். மற்றையது ஆன்மீக மார்க்கம்.

தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தும் இந்த மூன்று மார்க்கங்களுக்கும் நம்மிடம் பட்டறிவு உண்டு.

அரசியல் மார்க்கத்தின் இரண்டு வழிமுறைகளில் ஒன்று – அன்பு நெறி. அகிம்சை வழி. காந்தீயப் பாதை. தந்தை செல்வா அதன்வழி நின்று தமிழரை தம் தலைமையில் ஐக்கியப்படுத்தினார்.

அடுத்த நெறி ஆயுத மார்க்கம். தலைவர் பிரபாகரன் அந்தப் பாதையில் தமிழ் மக்களையும் அரசியல் தலைமைகளையும் ஓரணியில் தம் பின்னால் திரள வைத்தார்.

மூன்றாவதான ஆன்மீக மார்க்கத்தில் அதை நிரூபித்தவர் ஆயர் இராயப்பு யோசெப். அவர் அரசியல்வாதியல்லர். அதனால் அரசியல் தலைவர்கள் அனைவரையும் தம் பின்னால் திரட்ட முனையவில்லை. ஆனால் இன்றைய நிலையில் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அனைவரையும் தமது ஆன்மீக உயர்வினால் ஒன்று திரட்டி, ஓரணியாக்கும் மாண்பும், மரியாதையும், ஆளுமையும், தமிழுலகம் ஏற்கும் தகுதியும் அவரிடமே – அவரிடம் மட்டுமே – இருந்தது. அதையும் இழந்தோம். அதுவே நமக்குப் பேரிழப்பு.

# சீனாவின் கொரோனாத் தடுப்பூசிகளுக்கு அரசியல் அனுமதியே வழங்கப்பட்டது

## என்கிறார் ராஜித



சீனாவில் தயாரிக்கப்படும் சைனோபார்ம் தடுப்பூசிகளுக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் அனுமதி வழங்கப்படவில்லை.

அரசியல் அனுமதியுடனேயே அவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே சைனோபோர்ம் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குவது பொருத்தமானதல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

சீன தடுப்பூசிகள் தொடர்பில் ஆய்வை மேற்கொண்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் அதனைத் தயாரிக்கும் நிறுவனத்திடம் பல கேள்விகள் ஊடாக தெளிவுபடுத்தல்கள் கோரப்பட்டிருந்தன.

எனினும் கேட்கப்பட்ட கேள்விகளில் பெருமளவானவற்றுக்குப் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே தான் இந்த தடுப்பூசியின் பாதுகாப்பு தொடர்பில் தம்மால் உறுதிப்படுத்த முடியாது எனத் தெரிவித்து மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

எனினும் இந்த விடயத்தைக் கவனத்திற் கொள்ளாமல் சீனத் தடுப்பூசிகள் பெறப்பட்டுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனத்தாலும் இதுவரையில் சீனத் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் இதனைப் பொது மக்களுக்கு வழங்குவது பொருத்தமானதல்ல. மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனில் இந்த தடுப்பூசி வழங்கப்படக் கூடாது.

தடுப்பூசிகள் தொடர்பில் ஆராய்வதற்கு 8 பேர் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தீர்மானங்களை எடுக்கின்றார்.

மருத்துவத்துறையுடன் தொடர்புடைய விடயங்களுக்கு அரசியல் ரீதியில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் பொறுத்தமற்றவை.

எனவே இந்த விடயம் தொடர்பில் நாம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்புவதோடு, நேரடியாக மக்களிடம் சென்று தெளிவுபடுத் துவோம்.

இவ்வாறான அரசியல் தலையீடுகளின் காரணமாகவே புற்று நோயை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் சகாக்கள் இந்த சர்ச்சைக்குரிய எண்ணெயை இறக்குமதி செய்துள்ளதால் இது தொடர்பில் அரசாங்கம் தெளிவாக எந்த விடயத்தையும் கூறாமலுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதனால் அவர்கள் தேங்காய் எண்ணெயை கொள்வனவு செய்ய அஞ்சுகின்றனர். இதன் காரணமாக தரமான தேங்காய் எண்ணெய் விற்பனையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. – என்றார்.

# ஜனநாயக அமைப்புக்களின் தடையை அரசு மீள் பரிசீலனை செய்யவேண்டும்

## துரைரெட்னம் கோரிக்கை

ஜனநாயக ரீதியாகச் செயற்பட்ட அமைப்புக்களைத் தடை செய்தமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்ற தலைவர். இரா.துரைரெட்னம் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# இன அல்லது மத ரீதியில் அரசியல் கட்சி பதிவு தடை

## ‘பவ்ரல்’ அமைப்பு பாராட்டு

கொழும்பு, ஏப்.02

இன அல்லது மத ரீதியின் அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்யக்கூடாது என்ற முடிவை பாராட்டி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கடிதம் எழுதியுள்ளது.

தற்போதுள்ள அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வ பெயர்களில் மத அல்லது இனக் கருத்துக்களைத் திருத்துவதற்குரிய கால அவகாசத்தை வழங்குவதற்கான முற்போக்கான முடிவு ஜனநாயகத்தின் அடையாளம் என்றும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

அதன்படி தேர்தலில் போட்டியிடாத கட்சிகளை மீளாய்வு செய்யவும், அரசியலில் ஈடுபடாதவர்களின் பதிவை இரத்து செய்வதற்கான ஒரு முறையை வகுக்கவும் பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் கட்சிக்குள் குறைந்தபட்சம் ஒரு முக்கிய பதவியை பெண்களுக்கு வழங்குமாறு அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# நாட்டில் 113 சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின், கஞ்சாவுடன் ஐவர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த புதன்கிழமை போதைப்பொருள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட 113 சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முகத்துவாரம் பிரதேசத்தில் 9 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை பிரதேசத்தில் பட்டோவிட்ட பிரதேசத்தில் 4 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொம்பே பிரதேசத்தில் 10 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கதிர்காமத்தில் மோட்டார் சைக்கிளொன்று சோதனைக்குட்படுத்தப்பட்ட போது 6 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒரு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதோடு ஏனைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரங்கல் செய்திகள்

## மறை மாவட்டத்தில் சுடர்விட்டு பிரகாசித்த ஒளி விளக்கு இப்போது அணைந்துவிட்டது

### மன்னார் ஆயர் இம்மானுவேல் இரங்கல்

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை யின் இறுதிக் கிரியைகளுக் கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.



மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்று காலை இறைபாதம் அடைந்தமையை ஆழ்ந்த அனுதாபத்துடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் சுடர்விட்டு பிரகாசித்த ஒளி விளக்கு இப்போது அணைந்து விட்டது.

2015ஆம் ஆண்டு ஆயர் நோய்வாய்ப்பட்டதால் அதன் பின்னர் சிகிச்சைகள் பெற்று வந்தார். கடந்த இரண்டு மாதங்களாக அவர் நோய்வாய்ப்பட்ட நிலையில், அவரை யாழ்ப்பாணம் திருச்சிலுவை கண்ணியர் மட வைத்தியசாலையில் சேர்த்திருந்தோம். அங்கே சிகிச்சை பெற்று வந்த ஆயர் இன்று (நேற்று) காலை எம்மை விட்டு பிரிந்தார். அவருடைய இறுதி நல்லடக்கத்துக்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆயரின் திருவுடல் யாழ். ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டு. நாளை (இன்று) காலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் மறை மாவட்டத்துக்கு பவனியாக எடுத்து வரப்படும்.

பின்னர் மன்னார் ஆயர் இல்லத்தில் பெரிய வெள்ளி அன்று சிற்றாலயத்தில் மதியம் 2 மணியில் இருந்து அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மக்கள் வந்து இறுதி அஞ்சலியை செலுத்த முடியும். ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் ஒரு பவனியாக அவரது பூதவுடல் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை மதியம் 2 மணி வரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மாலை 3 மணி அளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள். அதனைத் தொடர்ந்து பூதவுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படும்.

இறுதி சடங்கு கட்டுப்பாட்டுடன் இடம்பெற உள்ளமையால் மக்கள் அதற்கு முன்னதாக உங்களின் இறுதி அஞ்சலியை மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அல்லது பேராலயத்தில் செலுத்திக்கொள்ள முடியும்.

இறுதி அடக்க திருப்பலியில் அனைவரும் ஒன்று கூடக் கூடிய சந்தர்ப்பம் இல்லை. கொரோனா தொற்று நோய் காரணத்தால் சுகாதார கட்டுப்பாடுகளுடன் திருப்பலி இடம் பெறவுள்ளது.– என்றார்

## ஒரு மகானை இழந்து நிற்கின்றது தமிழினம்

### விக்கி அனுதாபம்

கத்தோலிக்க மக்களின் புனித வாரம் அனுஷ்டிக்கப் படும் இந்த வாரத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இறையடி சேர்ந்தமை அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஒரு மக்கள் சேவகரை, மகானை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றோம்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இன்று யாழ் திருச் சிலுவை கன்னியர்மட வைத்தியசாலையில் இயற்கை எய்திய செய்தி எம்மை மிகவும் வருத்தத்தில் ஆழ்த் தியுள்ளது. அவரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தி பெற நாம் யாவரும் யாசிக்கின்றோம்.

கத்தோலிக்க மக்களின் புனித வாரம் அனுஷ்டிக்கப் படும் இந்த வாரத்தில் அவர் இறையடி சேர்ந்தமை அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டு கின்றது.

ஆயர் பணியில் 25 வருடங்கள் சிறப்பாகப் பணி யாற்றி ஓய்வுபெற்றபோதும் அவர் வெறுமனே இறை பணியுடன் மட்டும் நின்றுவிடாது மக்கள் பணியிலும் விசேடமாக தமிழ் மக்கள் சார்பான நலன்கள் தொடர் பிலும் அதீத அக்கறை காட்டியமையுடன் அனைவரும்



இந்ந நாட்டின் குடிமக்களாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் நேரிய வழிகாட்டியாக வாழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்துச் சென்ற ஆண்டகை ஆவார்.

அவரின் 75 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் நானும் பங்கேற்றிருந்தேன். அவர் புகழின், பணியின் உச்சநாளாக அன்றைய தினம் அமைந்திருந்தது. அவரின் முகத்தில் ஒருவித அமைதி, அன்பு, இறைமை போன்றவற்றை நான் கண்டேன். சில நாள்களுக்குள் ளேயே அவரின் தேகநிலை மாற்றமடையப் போகின் றது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை,

அதன்பின்னர் அவரின் தேகநிலை மோசமடைந்து அவர் திடகாத்திரத்தை இழந்து வாழ்ந்தார். மன்னார் செல்லும் போதெல்லாம் ஆண்டகையைத் தரிசிக்காது திரும்பமாட்டேன். பேச்சுத்திறன் குறைந்திருந்த போதும் அவர் எம்மை அடையாளம் கண்டு கொண்டார். ஒரு மக்கள் சேவகரை, மகானை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக! – என்றுள்ளது.

## தமிழினப் படுகொலையை அரங்கேற்றிய அரசை தோலுரித்துக் காட்டிய மாமனிதர்!

### அஞ்சலி செலுத்திய பின் சிறிதரன் தெரிவிப்பு



இறுதிப்போரில் தமிழினப் படுகொலையை அரங் கேற்றிய அரசை சர்வதேசத்துக்குத் தோலுரித்துக் காட்டிய மாமனிதரே இராயப்பு ஜோசப் ஆண்டகை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மறைந்த மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடலுக்கு நேற்று நேரில் அஞ்சலி செலுத்திய பின் னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசிய மண்ணிலே தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும் அவர்களுடைய வாழ்வுக்காகவும் ஒரு நீண்ட பெரும் பாதையிலே தன்னுடைய ஆழமான பங்கை ஆத்மார்த்தமாகவும் உணர்வாகவும் வெளிப்படுத்திய ஆன்மா ஒன்று மீளாத்துயிலில் உறங்கிக் கொண்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மீதும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும் அதிகமான பற்றுக் கொண்ட ஒரு மனிதனாக நின்று தன்னை அர்ப் பணித்து இன்று உறக்கம் கொள்கின்ற அவரை நினைக்கும்போது நெஞ்சம் துடிக்கின்றது .

இப்படியான ஓர் ஆயர் இனி கிடைப்பாரா என்பது சந்தேகமே. தமிழ் மக்களுடைய உரிமைக்காக – வாழ்வுக்காக – வாழ்வாதாரத்துக்காக – இருப்புக்காக குரல் கொடுத்த ஓர் ஒப்பற்ற மனிதரே அவர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சென்று மிகத் துணிச்சலோடு ஆதாரத்தோடு ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டுக் கொல் லப்பட்டார்கள் என்ற செய்தியை வெளிப்படையாகத் துணிச்சலுடன் சொன்ன ஒரு மனிதர்.

நெடுந்தீவில் பிறந்திருந்தாலும் வடக்கு, கிழக்கு தாயகம் எங்கும் வாழும் ஒவ்வொரு தமிழர்கள் மீதும் தமிழ் மண் மீதும் உறுதியான ஒரு பற்றுக்கொண்ட ஒரு மனிதனை தமிழ் மக்கள் இழந்து தவிக்கிறார்கள் – என்றார்.

## தமிழருக்காக ஒலித்த ஓர் ஆன்மீகக் குரல் மௌனித்தது

### சுரேஷ் க.பிறேமச்சந்திரன் இரங்கல்

மன்னார் மறைமாவட்ட ஆயரும் தமிழ்த் தேசியத்தின் மீது அளவிலா பற்றுக்கொண்டவருமான இராயப்பு ஜோசப் அவர்களின் மரணம் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்றும் தமிழ் மக்களின் விடியலுக்காகக் குரல்கொடுத்து வந்த ஓர் ஆன்மீகக் குரல் மௌனித்து விட்டது என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆயருக்கு அஞ்சலி செலுத்தி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களின் மரணம் என்பது தமிழ் மக்களை மீளாத் துயரில் ஆழ்த்தியிருக்கின்றது. தமிழ் இனத்தின் குரலாக – தமிழ் தேசத்தின் குரலாக – தனது இறுதிவரை ஒலித்து வந்தவர். தமிழ் இனத்தின் மீதும் தமிழ் மொழியின் மீதும் நீங்கா பற்றுக்கொண்ட துணிச்சல் மிக்க ஒரு போர்வீரனாகத் திகழ்ந்தவர். தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர். யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட நிலையில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பியவர். அதுவே அரசாங்கம் புரிந்த பாரிய இன அழிப்பை சர்வதேச மட்டத்தில் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த முதல் சம்பவமாகும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து மடு தேவாலயத்தில் தஞ்சம் அடைந்தபோது அவர்கள் அனைவரையும் பராமரித்துப் பேணி ப்பாதுகாத்தவர் ஆயர் பெருந்தகை. யுத்தம் முடிந்து மிக மோசமான துன்பச் சூழலுக்குள் மக்கள் அநாதரவாகவும் அச்சத்துடனும் முகாம்களில் அடைபட்டுக்கிடந்த பொழுது தமிழ் மக்களுக்கு துணிச்சலையும் தைரியத்தையும் கொடுத்து நம்பிக்கையூட்டியவர்.

அன்னாருக்கு எனது சார்பாகவும் எமது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது பிரிவால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தினருடனும் திருக்குடும்பதினருடனும் கத்தோலிக்க சமூகத்தினருடனும் மன்னார் மறைமாவட்ட மக்களுடனும் எமது துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# இரங்கல் செய்திகள்

## நசுக்கி ஒடுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட தமிழருக்காக பகிரங்கமாகச் சாட்சியமளித்தவரே ஆயர் ஜோசப்

### ஓய்வெடுத்துவிட்டார் என சுமந்திரன் கவலை

மன்னாரின் மன்னவரே!
உங்களைப் பற்றி
கவி எழுத
அருகதை இல்லை.....
உங்களைப்பற்றி
தாளில் வரைய
தகுதி இல்லை......
'தவி......' என்று
எழுதிவிட்டுச் சென்ற
தமிழினத்தின் தலையெழுத்தை
தரணியில் உயர்த்திட
தனியாய்
சிலுவை சுமந்த
ஓய்வுநிலை ஆயனே....

நெடுந்தீவில் பிறந்து
நெடுந்தூரம் நடந்து
இளம் வயதில் குருவாகி
இளமைக்காலத்தில் ஆயரான
அன்புநிறை ஆண்டவரே.....
கண்டிப்பாக இருந்தாலும்
கண்ணியமாய் வாழ்ந்தீரே
கவலைகள் சுமந்தாலும்
கனதியாய் வாழ்ந்தீரே
மன்னாரில் இருந்தாலும்
மன்னவராய் இருந்தீரே.....

மடுத்திருப்பதியின்
மாண்புயர
வேதசாட்சிகளின் மண்ணில்
வேராய் இருந்தவரே
மரணச்செய்தி கேட்டு
மனமுடைந்து விட்டோம்
செல்ல நினைத்தீரோ
எம்மை தனியாய் தவிக்க விட்டு
செல்ல நினைத்தீரோ......

ஐ.நா கைவிட்டபோது
ஆண்டவன் இருக்கிறான்
என்றீரே....
பேனாக்கள் காணாதபோது
பெரும் நாவாய்
இருந்தீரே.....
உலகத்தின் அரங்கதனில்
உரக்கப் பேசினீரே
தமிழராம் எமக்காய்
தனித்து நின்று காட்டிநீரே
யோசப் சுவாமியாய்
யோக்கியமாய் வாழ்ந்தீரே......

சாதாரண மக்களுக்காய்
அசாதாரணமாய் பேசிய
அன்புநிறை ஆயனே.......
நாங்கள் அநாதைகளல்லர்
ஆண்டவன் மக்களென்று
அடித்துச்சொன்ன
அன்பாளனே....
எம்மை அனாதைகளாய்
விட்டுவிட்டு
பயணிக்க நினைத்தீரோ......

ஓங்கி ஒலித்த
உரிமைக்குரல்தனை
இனி எங்கு காண்போம்....?
அனைத்தும் கடந்த
ஒரு அன்புநிறை
ஆயனை
இனி எப்போது
பார்ப்போம்....?
நாம் நிஜமாய்கண்ட....
இன்னொரு இராயப்பரே....
ஈழத்தவரின்
உண்மை மேய்ப்பரே....
மடு அன்னையின்
பாதத்தில் உம் ஆன்மா
அமைதியில்
இளைப்பாறுக....!

- ஜொணி மதுரநாயகம்

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக அடக்கப்பட்ட நேரத்திலும் ஓங்கி ஒலித்த குரல் ஒன்று ஓய்வெடுத்து விட்டது.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை போரின்போதும் போருக்குப் பின்பும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கி ஒலித்த ஒரு குரல். போரில் நசுக்கி ஒடுக்கப்பட்டு கொல்லப்பட்ட அல்லது காணாமல்போனோரின் எண்ணிக்கை தொடர்பில் கணக்கிட்டு



சர்வதேசத்துக்கும் ஆணைக்குழுக்களின் முன்பும் பகிரங்கமாகவே சாட்சியம் அளித்த ஒருவர். எமது மக்களின் இன்னல்களுடன் அனைத்து வழிகளிலும் பாடுபட்டதோடு அவைதொடர்பில்எமக்குகாலத்துக்குக்காலம் உரிய ஆலோசனைகளையும் வழங்கி வந்த ஒருவரை இழந்து நிற்கின்றோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு சட்ட ஆலோசகராக நான் செயற்பட்ட காலத்தில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையுடனான உறவு மேலும் அதிகரித்தது. என்றுமே மக்களின் விடயங்களிலேயே அதிக கரிசனை கொண்டவராகக் காணப்பட்ட ஆயர், நோய்வாய்ப்பட்ட பின்பும் தனது பங்களிப்பு இருக்க வேண்டும் என இரவு பகலாக முயற்சித்தார். அதனால் இன்று அவரை இந்த முயற்சியில் இருந்து நிரந்தரமாக விடுவித்துள்ளது.

இவ்வாறு தனது இன மக்களுக்காக ஓங்கி குரல் கொடுத்தது மட்டுமன்றி அதற்காகவே வாழ்நாளின் பெரும் பங்கை அர்ப்பணித்துச் செயற்பட்டவரை இழந்து நிற்பது ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஆற்றுப்படுத்த முடியாத துயருமாகும். இதனால் ஆயரின் பிரிவால் துயருற்ற அனைவருக்கும் விசேடமாக கத்தோலிக்க மக்களுக்கும் எனது இரங்கலைக் காணிக்கையாக்குகின்றேன் – என்றுள்ளது.

## சுயநிர்ணய உரிமைக்காகக் குரல்கொடுத்த முதன்மையானவரின் இழப்பு பேரிழப்பாகும்

### தமிழ் சிவில் சமூக அமையம் இரங்கல்

23 வருடங்கள் கத்தோலிக்க திருச்சபையின் மன்னார் மறை ஆயராகவும் பல தசாப்த காலங்களாக தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளராகவும் தன்னலமற்ற அருஞ் சேவையாற்றிய மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் கட்சி அரசியலுக்கும், சமயத்துக்கும் அப்பால் கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகவும் நீதிக்காகவும் நாளாந்த உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர். தமிழ் சிவில் சமூக அமையத்தின் தோற்றுனர்களில் ஒருவரும் அதன் முதல் அழைப்பாளருமான ஆயர் இராயப்பு ஜோசப்பின் இழப்பு எமக்கும் தமிழ்த் தேசத்திற்கும் ஈடு செய்யப்பட முடியாத இழப்பாகும்.

–இவ்வாறு இரங்கல் தெரிவித்துள்ளது தமிழ் சிவில் சமூக அமையம். அந்த அமைப்பின் சார்பில் இணைப் பேச்சாளர்களான வணபிதா வி. யோகேஸ்வரன் மற்றும் பொ.ந.சிங்கம் ஆகியோர் இணைந்து ஊடகங்க ளுக்கு வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

தனது ஆயர் பணியின் பெரும் பகுதியை யுத்தத்துக்கு மத்தியில் ஆற்றிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அப்போது இடம்பெற்ற கொடுமைகள் தொடர்பாக அஞ்சாமல் குரல் கொடுத்த அதே வேளை அந்நேரத்தில் தனது அருட்பணி மூலமாக பலருக்கு அடைக்கலமும் பாதுகாப்பும் உதவியும் செய்தார்.

குறிப்பாக யுத்தத்தின் பின்னர் நிலவிய பயங்கரமான சூழலில் தமிழ் மக்களின் குரலாக மிகுந்த துணிச்சலுடன் அவர்களின் துயரை வெளிக்கொணரும் பணியில் ஆயர் தனது சேவையை வழங்கினார். இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மைய பீடத்தில் இருந்து வந்த விமர்சனத்தையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களின் விடுதலையை தனது இறையியல் சம்பந்தமான விளங்கிக் கொள்ளல்களோடு சேர்த்து நோக்கி மக்களின் சார்பில் குரல்தந்தவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை. ஒருவகையில் இராயப்பு ஜோசப் ஆண்டகை விடுதலை இறையியல் தத்துவார்த்தத்தை தனது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார் எனக் கூடக் கூறலாம். இந்த நிலைப்பாடு காரணமாக அவருக்கெதிராக அரச இயந்திரம் குறிப்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஊடாக பல விசாரணைகளை முடுக்கி விட்டது அவரை பயங்கரவாதி என்றும் நாமம்சூட்டியது. அவற்றை பொருட்படுத்தாது தொடர்ந்து மக்கள் பணி ஆற்றினார். 2012 இல் வழங்கிய பேட்டியொன்றில் 'சர்ச்சைக்குரிய ஆயர்' என அவர் சிலரால் அழைக்கப்படுகின்றமை பற்றி கேட்கப்பட்ட போது 'இங்கு சர்ச்சைக்குரிய விடயங்கள் நடக்கின்றன. அவற்றை பற்றி பேச நான் துணிவதாலேயே சர்ச்சைக்குரிய ஆயர் என்று அழைக்கப்படுகிறேன்' என உறுதியாக ஜோசப் ஆண்டகை பதில் கூறியமை அவரின் மனவலிமைக்குச் சான்றாகின்றது.

ஜனவரி 2011 இல் இலங்கை அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் முன் தோன்றிய இராயப்பு ஜோசப் ஆண்டகை இறுதி யுத்தத்தில் 146, 479 தமிழர்களின் நிலை தொடர்பில் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற பதிவொன்றை செய்தார். தமிழ் மக்களுடைய நீதிக்கான போராட்டத்தில் இந்த பதிவு முக்கியமான முதல் மைல்கல்லாக இருந்தது.

2012 ஒக்ரோபரில் இணையம் ஊடாக ஜெனிவாவில் இலங்கை தொடர்பான பருவகால மனித உரிமைகள் தொடர்பிலான மதிப்பீடொன்றின் (Universal Periodic Review) போதான துணை மாநாட்டில் உரையாற்றிய ஜோசப் ஆண்டகை, தமிழ் மக்களுக்கு அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தீர்வாகாது என்றும் தமிழர்கள் ஒரு தேசம் என்ற வகையில் அவர்களது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் தீர்வே நிலைத்த தீர்வாக இருக்கும் என வலியுறுத்தினார். இதே விடயத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜோசப் ஆண்டகை மீள மீள வலியுறுத்தியுள்ளார். தமிழ்த் தேசிய அரசியலில் பிரியாணிக்கும் காட்சிகளை ஒரு குறைந்த பட்ச நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்குள் ஒன்றிணைப்பதற்கு ஆயர் தன்னாலான பல முயற்சிகளை தமிழ் சிவில் சமூக அமையம் மூலமாக எடுத்தார்.

2013 மற்றும் 2014 இல் பல நூற்றுக் கணக்கான கத்தோலிக்க பாதிரிமார்களை ஒருங்கிணைத்து சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தி இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் கடிதம் எழுதினார். தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஊடாக சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தும் பல்வேறு பணிகளும் அவரது தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டன. அரசியல் தீர்வு தொடர்பிலும் தெளிவான, உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அமையத்தின் செயற்பாடுகள் ஊடாக ஆயர் தமிழ் அரசியல் பரப்பில் எடுத்தியம்பினார். தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம் மக்களிற்கு தேர்தல்களின் போது வழங்கும் வாக்குறுதிகளின் படி செயற்பட வேண்டும் எனத் தொடர்ந்து வலி யுறுத்தினார்.

ஓகஸ்ட் 2014 இல் காணாமல் போனோர் ஆணைக்குழுவின் அழைப்பைத் தொடர்ந்து அவர்கள் முன் மன்னாரில் தோன்றிய இராயப்பு ஜோசப், உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கையில்லை என்பதை நீண்ட விளக்கம் ஒன்றை எழுத்து மூலம் வழங்கிய பின் சாட்சியமளிக்க மறுத்து வெளியேறினார். அவரால் அச்சந்தர்ப்பத்தில் கையளிக்கப்பட்ட கடிதம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் இலங்கை தொடர்பாக வழங்கப்பட்ட வாய்மொழி மூல அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2015 ஜனவரியில் மன்னார் ஆயர் என்ற வகையில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்களை மன்னாருக்கு வரவேற்றார். அங்கு ஆயர் ஜோசப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருத்தந்தை பொறுப்புக்கூறலின் முக்கியத்து வத்தை வலியுறுத்தி முக்கிய உரையாற்றினார்.

மே 2015 இல் துரதிஷ்டவசமாக சுகவீனமுற்ற இராயப்பு ஜோசப் ஆண்டகை நீண்ட கால சிகிச்சைக்கு பின் 2015 டிசெம்பரில் சிங்கப்பூரில் இருந்து தாயகம் திரும்பி அதன் பின்னர் 14 ஜனவரி 2016 அன்று அவரது பணிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஆயர் அவர்களின் பல தசாப்த காலப் பணி கத்தோலிக்க ஆன்மீக தலைமைத்துவத்துக்கு மட்டுமல்லாது சமூக அரசியல் தலைமைத்துவத்துக்கும் ஒருமாபெரும் முன்னுதாரணமாகும். ஆயர் காட்டிய முன்னுதாரணத்தைப் பின்பற்றி வலுவான சமூக தலைவர்கள் எம்மத்தியில் உருவாக வேண்டும் என்பது தமிழ் சமூகத்தின் இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்றாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயரின் அர்ப்பணிப்பான மாபெரும் பணிக்காக எமது இறுதி வணக்கங்களையும் நன்றிகளையும் நாம் கூறிக் கொள்கின்றோம். இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பாதையில் தமிழ் சிவில் சமூக அமையம் தொடர்ந்து தனது பணிகளை ஆற்றும் என்பதனையும் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றோம். – என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக்குக் கொண்டுவந்த துறவிகள்கூட இப்போது அரசைத் தூற்றுகின்றார்கள்

## பேராசிரியர் சரத் விஜயசூரிய தெரிவிப்பு



அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர தலையிட்ட துறவிகள் கூட இப்போது அரசாங்கத்தைத் தூற்றுகிறார்கள் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் புத்தசாசனம் உயிர்ப்பிக்க வேண்டுமென எழுதப்பட்ட லொறியில் தடை செய்யப்பட்ட இறைச்சிகளை எடுத்து செல்லுவதை போன்றதுதான் இந்த அரசாங்கம் எனவும் அவர் விமர்சித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் சரத் விஜயசூரிய மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாட்டில் நல்லாட்சியை உருவாக்குவதற்கு மிகவும் கடுமையாகப் பாடுபட்டோம்.

அந்தவகையில் கஷ்டப்பட்டு உருவாக்கியவை எப்போதும் வீண்போகா என்று நாம் இன்றும் நம்பிக்கை கொள்கின்றோம்.

நல்லாட்சியை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்ல முடியாதமைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றுதான் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முட்டாள்தனமான குறுகியகால நடவடிக்கைகள் மற்றும் மைத்திரிபால சிறிசேனவின் வினைத்திறனற்ற செயற்பாடுகளே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு சக்திமிக்க காரணியாக அமைந்தன.

அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது அதனை தாங்கள் பாதுகாப்போம், நாட்டின் வளங்கள் வெளிநாட்டினருக்கு விற்கப்படுகின்றமை உள்ளிட்ட பொய்யான பிரசாரங்களைக் கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது.

மேலும், நாட்டிலுள்ள விகாரைகளில் தர்ம உபதேசம் வழங்குவதைப்போன்று கோட்டாபயவால்தான் சிறந்த ஆட்சியை முன்னெடுக்க முடியுமென மக்கள் மனங்களில்நம்பிக்கைஏற்படுத்தப்பட்டது. இவைகளை எல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருந்தோம். பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறியது.

இவ்வாறு ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர தலையிட்ட துறவிகள் கூட இப்போது அரசாங்கத்தை தூற்றுகிறார்கள்.

ஆனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள், அரசாங்கம் ஆட்சிப்பூடம் ஏறி ஒரு வருடம் கடந்த போதிலும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக இருந்த மக்களும், ஆட்சிக்கு அமர்த்திய அரசாங்கத்தின் மீது தற்போது வெறுப்படைய ஆரம்பித்துள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குக் காரணம் யாராக இருந்தாலும் தண்டனை வழங்கப்படுமெனக் கூறி ஆணைக்குழு உருவாக்கி விசாரணை முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் உரிய நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மேலும் அரச சேவையாளர்களின் தற்போதைய நிலைமை என்ன?, மக்களின் வாழ்வாதார நிலைமை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது, பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இதேவேளை புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய எண்ணெய் இறக்குமதி விவகாரத்திலும் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் இன்னும் முன்னெடுக்கவில்லை.

ஆகவே இனியாவது மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சுதந்திரபுரத்தில் அமைந்துள்ள தனது காணியை மக்களுக்கு வழங்க ஆனந்தசங்கரி நடவடிக்கை



சுதந்திரபுரத்தில் அமைந்துள்ள தனது காணியை அரசாங்கத்திடம் கையளிக்கும் பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஒப்பமிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் வீ.ஆனந்தசங்கரிக்கு 15 ஏக்கர் மத்திய வகுப்பு காணியாக இருந்தது. குறித்த காணியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியேறி வசித்து வந்த நிலையில் அந்தக் காணியை தமக்கே பகிர்ந்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு ஆனந்தசங்கரி எழுத்துமூலமான கோரிக்கையை பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபரிடம் முன்வைத்தார். கொவிட் பரவல் காரணமாக குறித்த நடவடிக்கை மந்த கதியில் இடம்பெற்று வந்த நிலையில் அக்காணியை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்னெடுத்த வருகின்றது.

அந்த வகையில், நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆனந்தசங்கரியின் இல்லத்திற்கு சென்ற பிரதேச செயலக காணி அலுவலக உத்தியோகத்தர்கள் பகிர்ந்தளிப்பு செய்வது தொடர்பில் பேசியிருந்தமையுடன், மத்திய வகுப்பு காணியை அரசாங்கத்திடம் பாரமளிப்பதற்கான ஆவணத்தையும் வழங்கியிருந்தனர்.

குறித்த ஆவணத்தில் கையொப்பமிட்ட ஆனந்தசங்கரி, அவற்றை உரிய முறையில் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். குறித்த காணிகள் அரச காணியாக்கப்பட்டதன் பின்னர் அப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், 3 மாத கால அவகாசத்துக்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளதாகவும் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

குறித்த காணி பகிர்ந்தளிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தி, மத்திய வகுப்பு காணி என்பதற்காக வீட்டுத் திட்டங்களை இழந்து நிற்கும் மக்களுக்கு வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், இயலுமான வரை மக்களின் கரங்களுக்கு குறித்த காணி விரைவாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறும் வினயமான கோரிக்கையை அவர் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பொலிஸுக்கு இலஞ்சம் வழங்க முற்பட்டவர் கைது

பாணந்துறையில் போக்குவரத்து கடமைகளிலிருந்த பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்க முற்பட்டமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை – மொரந்துட்டுவ பகுதியில் 52 வயதான குறித்த சந்தேகநபர் பாணந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் சந்தேகநபர் பயணித்த வாகனத்தை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்திய போது அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் காணப்படவில்லை.

இதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்த போது குறித்த சந்தேகநபர் 1,000 ரூபா இலஞ்சம் வழங்க முற்பட்டுள்ளார். பொலிஸ் அதிகாரிகள் அதனை மறுத்த போதும் மீண்டும் மீண்டும் பணத்தை வழங்க முற்பட்ட போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு கொரோனா தொடர்பில் விழிப்புணர்வு

பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் கொரோனாத் தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பொதுமக்கள் , மாணவர்கள், கலைஞர்களுக்கான தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு நாவிதன்வெளி கலாச்சார மத்திய நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு நாவிதன் வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமை தாங்கியமையுடன் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் வளவாளராக கலந்து கொண்டு விளக்கமளித்தார்.



இந்தநிகழ்வில்கொரோனா அனர்த்தத்திற்கு எவ்வாறு முகம் கொடுப்பது, பாராம்பரிய உணவு பழக்க வழக்கங்கள் பண்பாட்டு மருந்துகளைக் கையாளும் முறை என்பன விரிவாக ஆராயப்பட்டு தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நச்சு எண்ணெய் கொண்டுவந்தோரை தண்டிப்பது அரசின் வேலை இல்லை

### அமைச்சர் காமினி லொகுகே இப்படிக் கூறுகின்றார்

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்தவர்களை தண்டிப்பது அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நச்சு தேங்காய் எண்ணெய் விவகாரத்தை ஆராய்ந்து, இறக்குமதியாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுப்பது இலங்கை சுங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிலையத்தின் கடமையாகும் எனவும் காமினி லொகுகே சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விவகாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாட்டு மக்கள், தங்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது, அவர்களது வாழ்க்கையை வளமாக்குவார்கள் என்ற நம்பிக்கையிலாகும் எனவும் காமினி லொகுகே கூறியுள்ளார்.

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்தவர்களை தண்டிப்பது அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir




- வே.வரதசுந்தரம் -

அரவிந்தர் ஆச்சிரமம்

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

**அரவிந்தருக்கு அருளிய அன்னை**
**நேர்ந்திடுவாள் வோண்டுதலை**
**நிறைசெய்வாள் காளி!**
**ஈர்த்திடுவாள் என்னெஞ்சை**
**ஆச்சிநீ காளி!**
**சந்திரன் ஐயா**
**சாத்துப்படி கண்டு**
**மனமது லயிக்கும்**
**ஆச்சிநீ காளி!**
**வேதியர் காட்டும்**
**தீபங் கண்டு**
**உள்ளம் உருகும்**
**ஆச்சிநீ காளி!**

திருகோணமலை நகரில் அருளாட்சி புரியும் பத்திரகாளி அம்பாள் ஆலயம் தரிசிக்க வந்த அடியார்கள் அரவிந்த அடிகளாருக்கு அருளிய அம்பாளின் நினைந்து, நினைந்து மெய்மறக்கின்றனர்.

தேவி தரிசனம் கிடைத்த போதெல்லாம் அடியார்கள் விடுத்த கோரிக்கைகள் பல்வகையானவை. செம்பொன்னும், மண்ணும் கேட்டிருக்கிறார்கள். பசியால் வாடும் மக்களின் பசிநோய் போக்கும்படி கோரியிருக்கிறார்கள். நோயின் காரணமாகத் துயருறும் மக்களின் நோய் போக்கும்படி கெஞ்சியிருக்கிறார்கள். நல்ல மனம் கேட்டிருக்கிறார்கள். பக்தி, வீடுபேறு, திருவடிப்பேறு ஆகியவற்றை நாடியிருக்கிறார்கள். மனிதப் பிறவி, அன்பு தருமாறு இரந்து கேட்டுள்ளனர். அன்பும், அருளும் அறமும் வேண்டியிருக்கிறார்கள்.

ஆனால்..'அன்னையே! எனது நாட்டு மக்களின் விடுதலைக்குப் போராட எனக்கு நெஞ்சுறுதியும் நீண்ட ஆயுளும் தருக.' - என இறைவி தரிசனம் கிடைத்தபோது இவ்வாறு கேட்டவர் வேறு யாருமல்லர், அரவிந்த அடிகளாரே ஆவார்.

ஒரு தீவிரவாதியாகப் புரட்சி வீரரானாக வாழ்க்கையை ஆரம்பித்து சமயவாதியாக, மெய்யியற் சிந்தனையாளனாகப் பராசக்தி பக்தனாக மலர்ந்தவர் புரட்சியோகி அரவிந்த அடிகள். இந்தியாவில் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இயங்கி தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி விசாரணையை எதிர்நோக்கி சிறையில் வாடியிருந்த வேளையில் அரவிந்தருக்கு இறைவியின் இடத்து நாட்டம் பெருக்கெடுத்து ஓடியது. அவர் கைது செய்யப்பட்டதும் மனம் தளர்ந்துபோனார். 'எனக்கு வாழ்கையிலே ஓர் இலட்சியம் உண்டு. எனது நாட்டு விடுதலைக்குப் பாடுபடல் வேண்டும். இவ்வாறாகிப் போனால் என்சேவை என்னாவது ?'என்றெல்லாம் கவலைப்பட்டார்.

இவ்வாறு! மூன்று நாள்கள் அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்த பொழுது 'பொறுத்திருந்து பார்' என்ற அன்னையின் குரல் கேட்டது. ஒரு மாதமாகத் தனிமையில் அடைபட்டுக் கிடந்தபோது சொற்ப நாள்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் ஒன்று அவர் ஞாபகத்துக்கு வந்தது. எல்லா அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு, செயற்பாடுகளில் இருந்து உள்ளத்தாலும், உடலாலும் ஒதுங்கி, தனிமையை நாடிச்சென்று உள்ளூரப் பார்த்து அன்னை பராசக்தியின் சிந்தனையில் இரண்டறக் கலக்கவேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டது. எனினும் அந்த உள்ளுணர்வுக்கு, இறைவியின் ஆணைக்குச் செவிகொடுக்கும் உள்ளத் திண்மை அரவிந்தரிடம் அப்போது இருக்கவில்லை.

'உன்னால் சாதிக்க முடியாத, உனது முயற்சியால் ஒடிக்க முடியாத பாசவிலங்கினை ஒடிக்க இன்று இச்சிறையில் அடைத்து நானே வழிப்படுத்தி விட்டேன்' என்று அன்னை பராசக்தி குரல் கொடுப்பது அவருக்குக் கேட்டது.

அச்சிறைச்சாலை அறையொன்றில் அவரிடம் இறைவி பகவத்கீதை ஒன்றினை வழங்கினாள். அரவிந்தருக்கு புதிய தெம்பும், அசையாத இறைநம்பிக்கையும் ஏற்பட்டது. கீதை கூறும் சாதனையை ஒழுக்காறாகக் கொண்டார். கிருஷ்ண பகவான் அருச்சுனனிடம் கோரியது என்ன என்பதைச் சிந்தித்தார்.



'நாம் நமது கடமைகளை விருப்பு, வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும்.

சேவை ஆற்றும்போது பலனைப் பேணாது இயங்கவேண்டும்.

நான், எனது என்னும் அகந்தையை விடுத்து, இறைவியின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலிழந்து செயற்படல் வேண்டும்.

வாழ்க்கையின் உயர்மட்டம், கீழ்மட்டம் ஆகிய இருநிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.

நண்பன், எதிரி என்ற வேறுபாடின்றிச் செயலாற்றும் மனப்பக்குவம் வேண்டும்.

வெற்றி, தோல்வி இரண்டினையும் ஒக்கவே நோக்கும் மனத்திராணி வேண்டும்.'

இதுவே கீதை கூறும் செய்தி என்பதைத் தெளிந்தார். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று துணிந்தார். அன்னையைச் சரணடைந்தார் அரவிந்தர்.

இறைவியின் திருவருளால் அவரிடம் சிறைக்காவலர்கள் கருணை காட்டியதும், சிறையில் இருந்த குற்றவாளிகள் அவருக்கு இறைவியாகவே தோன்றியதும், எதிர்பாராதவிதமாக விசாரணையின் போது நீதிமன்றத்தில் அன்றைய புகழ்பூத்த வழக்கறிஞர் சித்தரஞ்சன் தாஸ் தோன்றி இவருக்காக வழக்காடியதும், இவர் விடுதலை பெற்றதும் நாம் அறிந்ததே.

இவை எல்லாம் திருவருட் குறிப்பினால், இறைவியின் கடாட்சத்தால் நிகழ்ந்தவை ஆகும். அரவிந்தரின் வாழ்வினை ஊன்றிப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அரவிந்தர் பொதுவாழ்க்கைக்குத் தம்மையே அர்ப்பணித்தவர். 'இந்திய நாடு தருமத்தினால் வாழ்வது. தருமத்துக்காக வாழ்வது!' என்பதே அவரின் திடமான நம்பிக்கை. இதுவே அவர் பொதுவாழ்க்கை. பொதுவாழ்க்கையில் ஈடுபட்டபோது அவருக்கு வேதனைகள், சோதனைகள் ஏற்பட்ட வேளைகளில் அன்னையிடத்துப் பரிபூரண சரணாகதி அடைந்து விடிவு பெற்றிருக்கிறார் .

அன்னை பராசக்தியிடம் பூரணமாகச் சரண்அடைதலே அவர் வாழ்க்கையின் உயிர்ப்பாக, உயிர் நாடியாக, வேட்கையாக விளங்கியது.


இந்தியத் திருநாட்டுக்கு யாத்திரை செல்லும் அடியார்கள் பாண்டிச்சேரியில் உள்ள அரவிந்தர் ஆச்சிரமம் சென்று ஆன்மீக இனபந்துய்க்க வேண்டும். அரவிந்தரும் அன்னையாரும் இறுதிக்காலத்தில் வாழ்ந்த ஆசிரம அறைக்குள் யாம் நுழைந்ததும்; மெய்சிலிர்த்துப் போனோம். அவர்களது சமாதியை வழிபட்ட போது ஆழ்ந்த சாந்தி உணர்வு ஊடுருவியது.



**பானைபிடித்தபாக்கியம்**

கோயில்கள் நிறைந்த காஞ்சியில் அம்பாள் காமாட்சி. கலைமகளையும், திருமகளையும், கண்ணாக உடையவள் என்பது பொருள். இப்படிப் பொருள் பொதிந்த பெயர் காமாட்சி. கலைமகளையும் திருமகளையும் தனது இரு கண்களாக உடையகாமாட்சி தனது அடியவர்களுக்கு நிகரற்ற அறிவுச் செல்வம், பொருள்செல்வம் ஆகிய இருவகைச் செல்வங்களையும் அள்ளி வழங்குவாள்.

தனது கணவன் வழங்கிய இரண்டு நாழியளவு நெல்லை வைத்து முப்பத்தி



யிரண்டு அறங்களை வளர்த்தவளல்லவா காமாட்சி? எனவே அறம் வளர்த்த நாயகியானாள்.

மீன்போன்றவிழிகளைஉடையவள் மீனாட்சி. தான் இட்ட முட்டைகளைத் தனது கண்பார்வையால் குஞ்சு பொரிக்கச் செய்யும் மீன் போன்று, தனது அடியவர்தம் துயர் போக்குபவள் மீனாட்சி. கணவனின் புகழ் சௌபாக்கியத்தை உயர்த்துபவள் அவள்.

சுந்தரபாண்டியனான சிவன் மீனாட்சியான தடாதகையைத் திருமணஞ் செய்தான். சிவனது சடாமுடி மணிமுடியாயிற்று. கொன்றைமாலை அணிந்தவன் வேப்பம்பூ மாலை அணிந்தான். பாம்பினைஅணிந்தவன் மாணிக்கச் சுடர் அணிந்தான். விடைக்கொடி பிடித்தவன் கயற்கொடி பிடித்தான். ஆண்டி அரசன் ஆனான். இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? பானை பிடித்தவள் பாக்கியம்! சொக்கநாயகி கை பிடித்ததால் இவருக்கு இச்சிறப்புக்கள் வந்தெய்தின.

'சொக்கநாயகியாள் பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே' - இப்படிப் பாடுவார் பலபட்டடை சொக்கநாதப் புலவர்.

அவள் அடியவர்களாகிய நாம்பாக்கியசாலிகள் எனலாம்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக முழங்காவிலில் மாணவர்கள் கவனவீர்ப்பு





(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஏப்.02

கிளிநொச்சி, பூநகரி கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களால் போதைப் பொருளுக்கு எதிராக கவனவீர்ப்பு போராட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டன.

நாச்சிக்குடா சந்தியிலிருந்து நேற்று வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு பேரணியாக பாடசாலை வரை சென்று பாடசாலை முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டனர்.

'போதைப் பொருள் பாவனை குடும்ப வன்முறையை தூண்டும்','புகை நமக்கு பகை', 'மது அருந்துதல் வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு' எனப் பல்வேறு விழிப்புணர்வுப் பதாகைகளைதாங்கியவாறும் போதைப்பொருள்பாவனைக்குஎதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். போதைப் பொருள் பாவனைக்கெதிரான துண்டுப் பிரசுரங்களையும் மாணவர்கள் மக்களுக்கு வீதிகளில் வழங்கினர்.

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இக் கவனவீர்ப்பு போராட்டத்தில் பேரணியை அடுத்து பாடசாலை முன்பாகவும் வீதியோரம் பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள் கோஷம் எழுப்பினர்.

# அரசின் பழிவாங்கல் ஆணைக்குழுவில் ஜனாதிபதியின் தலையீடு கிடையாது

## என்கிறார் அமைச்சர் காமினி லொக்குகே

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டில் ஜனாதிபதி தலையிடவில்லை, அரசியல் அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் அதிகாரத்தால் பாதிக்கப்பட்ட அரசசேவையாளர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை குறுகிய காலத்தில் நிறைவேற்றியுள்ளார். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல சவால்கள் தோற்றம் பெற்றன. சிறந்த திட்டமிடல் ஊடாக அனைத்து சவால்களும் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையை குறைக்க பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்தி உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பலப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் தலையீடு காணப்பட்டதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கள் தொடர்பாக ஆராய 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் குறைகேள் அதிகாரி(ஒம்புட்ஷமன்) காரியாலயம் நிறுவப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக பல தரப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.



ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழு எவ்வித அரசியல் அழுத்தங்களுமின்றி விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஜனாதிபதி ஒருபோதும் தலையிடவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்களால் பாதிக்கப்பட்டுள்ள அரச சேவையாளர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. - என்றார்.

# கொழும்பு ஆனந்தா கல்லூரியின் 7 - 8 ஆம் தரங்கள் மூடப்பட்டன

கொழும்பு, ஆனந்தா கல்லூரியின் தரம் 7, 8 ஆகியவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

ஆசிரியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால் ஆனந்தா கல்லூரியின் சுமார் 70 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்ட ஆசிரியரின் முதல் நிலை தொடர்புகளாக அடையாளம் காணப்பட்டு மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு ஓட்டமாவடி பகுதியில் 57 கொரோனா சடலங்கள் அடக்கம்

மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு - ஓட்டமாவடி சூடுபத்தினசேனை கொரோனா வைரஸ் அடக்கஸ்தலத்தில் இதுவரை 57 பேரின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 5 ஆம் திகதியில் இருந்து அங்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

அதன்படி கடந்த 5 ஆம் திகதி முதல் இன்று வரையான காலப்பகுதியில் குறித்த பகுதியில் 57 பேரின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதில் ஓர் ஆண் ஒரு பெண் உட்பட கத்தோலிக்கர்கள் இருவரின் சடலங்களும் உள்ளடங்கும் என்று ஓட்டமாவடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட்டு வந்த நிலையில், முஸ்லிம் மக்களின் கடும் எதிர்ப்புக்கு பின்னர் அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 25 இலங்கை மீனவர் இந்தியத் தரப்பால் மார்ச் மாதத்தில் மாத்திரம் கைதாகினர்

இந்தியக் கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் அந்நாட்டு கடற்பரப்பில் மார்ச் மாதத்தில் மாத்திரம் 25 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, 4 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த 4 படகுகளிலும் இருந்து ஹெரோயின் மற்றும் துப்பாக்கிகள் என்பனவும் இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண மேலும் தெரிவிக்கையில் -

இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் மார்ச் 5 ஆம் திகதி மீன்பிடிப்படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளதோடு, அதிலிருந்த 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படகு சிலாபத்திலிருந்து சென்றதாகும். அத்தோடு இந்த படகிலிருந்து 200 கிலோ கிராம் ஹெரோயின் காணப்பட்டதாகவும், குறித்த படகை இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவு சுற்றி வளைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, அதிலிருந்த ஹெரோயின் தொகை கடலில் வீசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் மார்ச் 15 ஆம் திகதி மீண்டும் 3 இலங்கை மீன்பிடி படகுகளும் அவற்றிலிருந்த 19 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம் மூன்றில் ஒரு படகிலிருந்து 350 கிலோ கிராம் ஹெரோயின் தொகையும் , ஏ.கே.47 ரக துப்பாக்கிகள்ஐந்தும்கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த படகுகள் தங்காலை மற்றும் இலங்கையின் தென்பகுதிகளிலிருந்து சென்றவையாகும்.

அதற்கமைய குறித்த 4 படகுகளிலிருந்தும் 25 மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## காட்டுப்பன்றி மனித மோதல்களைத் தடுக்கும் பாரம்பரிய வழிமுறை



பொதுவாகக் காட்டுப் பன்றிகளுக்குப்பார்வைமற்றும்செவித்திறன் மிகவும் குறைவு.

இதை ஈடுசெய்யும் வகையில் அவற்றிற்கு மோப்பத்திறன் அதிகமாகும். ஆகவேதான் இது நெடுநேரம் தலைகுனிந்தே நீண்ட மூக்கினைத் தரையில் முகர்ந்து தான் விரும்பும் திசையில் பயணிக்கும்

இந்தக் குணத்தினைக் கருத்தில் கொண்டு, காட்டுப் பன்றிகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முடிதிருத்தும்கடையிலிருந்துமனிதமுடிகளைப் பெற்று விவசாயப் பயிர்களைச் சுற்றி வேலிப் போல் மெலிதான கோடுபோல் பரப்பி வருகின்றனர். இந்த முடி பரப்பப்பட்ட இடங்களில் காட்டுப்பன்றி வரும்போது, அவை தன் மூக்கினால் அவ்விடத்தை நுகரும் போது இந்த மனித முடிகள் பன்றிகளின் நாசித் துவாரங்களில் சென்றடைந்து எரிச்சலை உருவாக்கும். இதன் மூலம் அவை பாதிப்புக்குள்ளாகி, அபாயக் குரல் ஏற்படுத்தும். அது மற்ற காட்டுப் பன்றிகளையும் சேர்த்து விரட்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# 1,000 ரூபாவுக்கு அத்தியாவசிய உணவு பொதி; 27 அத்தியாவசிய பொருள்கள் விலை குறைப்பு

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள சகல சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 12 அத்தியாவசியப் பொருள்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொதி விற்பனை செய்யப்படுகிறது.

27 அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பல சவால்கள் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ளன. சிறு ஏற்றுமதி பயிர்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளமையால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் தேசிய உற்பத்தியாளர்கள் ஒரு புறம் நன்மையடைந்துள்ளார்கள். தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காகக் காணப்படுகிறது.

அரிசியின் விலையில் தளம்பல் நிலை ஏற்படுவதற்குப் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

புத்தாண்டு காலத்தில் நாட்டு மக்களுக்கு நிவாரண விலையில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட ஆலோசனை வழங்கியுள்ளார்.

சிறு மற்றும் மொத்த உற்பத்தியாளர்களிடமிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை நேரடியாகக் கொள்வனவு செய்யும் புதிய வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.



விலை மனுகோரல் ஊடாகப் பொருள்களைக் கொள்வனவு செய்யாமல், கையிருப்பின் அடிப்படையில் பொருள்களை கொள்வனவு செய்யும் வழிமுறை தற்போது செயற்படுத்தப்படுகிறது.

பண்டிகைக் காலத்தில் பல்வேறு துறைகள் ஊடாக நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய சதொச விற்பனை நிலையம் ஊடாக அத்தியாவசிய உணவுப் பொதி நிவாரண அடிப்படையில் நேற்று முதல் ஏப்ரல் மாதம் வரை விற்பனை செய்யப்படும்.

வெள்ளை அரிசி , நாட்டரிசி, வெள்ளை சீனி, பருப்பு, கோதுமை மா என்பன தலா ஒரு கிலோ, உப்பு, நெத்தலி 250 கிராம், துண்டு மிளகாய், தேயிலை தூள், சோயா மற்றும் முகக்கவசம் ஆகிய 12 அத்தியாவசியப் பொருள்களின் பொதி ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

அத்தியாவசிய பொருள்களின் விலை கடந்த காலத்தை விட தற்போது பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் பல தேசிய மட்டத்தில் பயிரிடப்பட்டுள்ளன. எதிர்பார்க்கும் விளைச்சல் கிடைக்கப் பெற்றவுடன் தற்போது விலை அதிகரிக்கப்பட்டுள்ள மஞ்சள், உழுந்து, பயறு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையும் குறைக்கப்படும்.– என்றார்.

## கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்து வவுனியாவில் இளைஞர் கைது

வவுனியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலய மொன்றினுள் வைத்து முஸ்லிம் இளைஞனொருவன் கடந்த புதன்கிழமை இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களின் முக்கிய வழிபாட்டு வாரமாக தற்போது காணப்படும் நிலையில் மேற்படி ஆலயத்தில் இரவு வழிபாடு இடம்பெற்ற நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞனொருவர் தேவாலயத்தினுள் சென்றுள்ளார்.

அங்கிருந்தவர்கள் அந்த இளைஞனை விசாரித்தபோது 25 வயதுடைய கண்டி அக்குரனை பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞன் எனத் தெரியவந்துள்ளது.

உடனடியாக அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாவில் இருந்து விரைவாக குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலையில்!

கொழும்பு, ஏப்.02

கொரோனா நோயாளர்கள் விரைவாக குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது.

அதன்படி இலங்கையில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் குணமடையும் சதவீதம் 96.45 ஆகப் பதிவாகியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இந்தியா 2 ஆம் இடத்திலும் ரஷ்யா 3 ஆவது இடத்திலும் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் இதுவரையில் 92 ஆயிரத்து 442 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 89 ஆயிரத்து 90 பேர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 2 ஆயிரத்து 786 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே நேரம், நாட்டில் பதிவாகியுள்ள மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 566 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக மருதானையில் ஆர்ப்பாட்டம்!





வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

மத்திய கொழும்பு ஐக்கிய மக்கள் சக்தியால் ஒழுங்கு செய்யப்பட்ட எதிர்ப்பு பேரணி கடந்த புதன்கிழமை மருதானை சாஹிரா கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், மனோ கணேசன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இலக்கான சியோன் தேவாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டார் அமெரிக்க உயர்ஸ்தானிகர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இலக்கான சியோன் தேவாலயத்தை அமெரிக்க உயர்ஸ்தூதரகத்தின் உயர் அதிகாரி அன்டோனி எப்.ரேன்சு லியும் அவரது குழுவினரும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.



கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு சியோன் தேவாலயத்துக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட அன்டோனி எப்.ரேன்சுலியும் அவரது குழுவினரும் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்துக்கொண்டனர்.

மேலும் நல்லாட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள் கட்டுமான பணிகள் இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இவைகளை கேட்டறிந்து கொண்ட அன்டோனி எப்.ரேன்சுலி, ஆலயத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தம்மால் முடிந்த ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.




இயேசுவின் சிலுவை சாவை எண்ணி ஆலங்கள் தோறும் உயர்த்தப்பட்டுள்ள சிலுவை அடையாளத்தின் புனிதம் வெளிப்படுத்தப்பட்ட தினமே புனித வெள்ளியாக நினைவு கூரப்படுகிறது. “நம் அனைவரின் தீய செயல்களையும் அவர் மேல் சுமத்தினர். அவர் ஒடுக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார், ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை.

“அவர் கைது செய்யப்பட்டு, தீர்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டார், அவருக்கு நேர்ந்தது பற்றி அக்கறை கொண்டவர் யார்? ஏனெனில் வாழ்வோர் உலகில் நின்று அவர் அகற்றப்பட்டார். என் மக்களின் குற்றத்தை முன்னிட்டு கொலையுண்டார்” அவ் கொலையுண்டதால்தான் சிறுவை மரமும் புனிதம் பெற்றது அவமானத்தின் சின்னமான சிலுவை புனித சின்னமானது. இதுவே திருச் சபையின் அடையாள சின்னமானது.

“தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்ற இறுதி வார்த்தையில் கூட பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்” என்ற மன்னிப்புக்கு மகுடம் சூட்டியதை எம் வாழ்வில் எந்த நிலையிலாவது மன்னித்து வாழ முனைந்தோமா? முயல்வோமா? இதுவே இறை பற்றில் உள்ளோராக வெளிப்படுத்த கிடைத்த அழைப்பாகும்.

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிவது தன்னை இழப்பதற்கல்ல பிறருக்கு பயன்தரும் நிகழ்வுக்காக என்பதை இன்றைய நாள்களை நாம் சிலுவையை நோக்கி சிந்திக்க கிடைத்த சந்தர்ப்பமாக்குவோம். அச் சிலுவையை நம்பி பயணம் செய்வோர் அதன் புனிதம் காக்கும் பெரிய வெள்ளியை இறை உறவுடன் சங்கமிக்கும் போது ‘யூதருக்கும் கிரேக்கருக்கும் மடமையாக இருந்த சிலுவை கிறிஸ்தவர்களுக்கு கடவுளின் வல்லமையாக மாறியது.’ என்பதனை ஒருவர் இயேசுவின் சிறுவையில் வெறுமனே துன்பத்தையும் அவமானம் நிறைந்த சாவையும் பார்க்கலாம். ஆனால் நம்பிக்கை உடையோர் அந்த சிலுவையில் மறைந்திருக்கும் மீட்பையும், வல்லமையையும் அது கொண்டு வரும் மகிழ்ச்சியையும் பார்க்க முடியும். இவற்றில் உங்கள் பார்வை எப்படி உள்ளது? அதனை பார்க்கும் விதம் எமது வாழ்வில் வெளிப்படும் போதுதான் எமது வாழ்வை பாவக்கதைகள் அற்ற பிறரன்வு பாணிகளால் தியாகப் பயணத்தின் பங்காளராக பயணிக்கும் புனித வெள்ளியாக அனுபவிக்க அழைப்பு விடப்படுகிறது.

**– கலாபூஷணம் செ.யோசப்பாலா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த இருவாரங்களுக்குள்ளே ஸ்பூட்னிக் – வி ஊசி கிடைக்கும்

## சன்ன ஜயசுமன தெரிவிப்பு

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்பூட்னிக் – வி கொரோனாத் தடுப்பூசி இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் இலங்கையை வந்தடையும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி, சினோபோர்ம் மற்றும் ஸ்பூட்னிக் – வி ஆகியவை இந்த மாத இறுதிக்குள் பயன் பாட்டுக்கு கிடைக்கும் எனக் கூறினார்.



ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்க ளுக்கு பக்க விளைவுகள் ஏற்படுவதாக உலகம் முழுவதும் பதிவாகின்றபோதும் இலங்கையில் பக்க விளைவுகள் குறைவாகவே காணப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

மேலும் குறித்த தடுப்பூசி தொடர்பான ஆராச்சியை அனைத்துத் தரப்பினரும் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்கு நன்கொடையாக வழங் கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசியின் 6 லட்சம் டோஸ் ஆரம்பத்தில் நாட்டில் உள்ள சீனர்களுக்கு வழங்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டார்.

அவசரகால பயன்பாட்டுக்காக சினோபோர்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு இன்னும் அங்கீகாரம் வழங்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சரியான நேரத்தில் சரியான ஒருவரை தேசியப்பட்டியல் ஊடாக அனுப்புவோம்

## என்கிறார் ருவான்



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப் பினராக சரியான நேரத்தில் சரியான ஒருவரை நாடா ளுமன்றத்துக்கு அனுப்புவோம். தற்போது அதற்கான சூழல் ஏற்பட்டு வருகின்றது என கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப் பினர் நியமனம் தொடர்ந்து இழுபறியில் இருந்து வருவது தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில் –

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றம் செல்வதற்கான மக்கள் ஆணை கிடைக்கவில்லை. இருந்தபோதும் தேசியப் பட்டியலில் ஓர் ஆசனம் கிடைத்திருக்கின்றது. அந்த இடத்துக்கு தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை கட்சியின் செயற்குழு ஏற்கனவே தீர்மானித்து, அதுதொடர்பில் அவருக்கு அறிவித்திருந்தது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்க அதற்கான விருப்பத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

அத்துடன் தலைவர் தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குச் செல்ல மறுத்தால் பிரதி தலைவர் என்றவகையில் நான் செல்லவேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கின்றது. என்னை பொறுத் தமட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்டால் மாத்திரமே நான் நாடாளுமன்றத்துக்குச் செல்வேன் என்ற கொள்கையிலேயே தொடர்ந்தும் இருக்கின்றேன்.

இருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தி சரியான நேரத்தில் சரியான ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம். நாட்டின் தற்போதை அரசியல் நிலைமையைப் பார்க் கும்போது அதற்கான சூழல் ஏற்பட்டு வருவதாகவே தோன்றுகின்றது.

எவ்வாறு இருந்தாலும் நாடாளுமன்றத்தில் ஐக் கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் யாரும் இல்லா விட்டாலும் அரசியல் ரீதியில் நாங்கள் எமது பொறுப்பை மேற்கொண்டுவருகின்றோம். அத்துடன் கிராம மட் டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். அத்துடன் கட்சியில் இருந்து தூரமாகி இருந்த ஆதரவாளர்கள் பலரும் மீண்டும் எம்முடன் இணைந்துகொள்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்றை எதிர் காலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்ற தேவை ஆதர வாளர்களுக்கு ஏற்பட்டிருப்பதை எங்களால் உணர்ந்து கொள்ள முடியுமாக இருக்கின்றது. அதற்கான அடித் தளத்தை தற்போது நாங்கள் ஏற்படுத்தி வருகின் றோம். – என்றார்.

# புற்றுநோய் தேங்காய் எண்ணெய் விவகாரம்: வர்த்தக அமைச்சர் பதவி விலகவேண்டும்

## காவிந்த ஜயவர்தன கோரிக்கை



புற்று நோயை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறு கள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டமைக்காக வர்த்தக அமைச்சர் பதவி விலக வேண்டும். அவ்வாறில்லை என்றால் இதற்கு எதிராக நாடாளுமன்றத்திலும் சமூகத்தி லும் குரல்கொடுப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மக்களின் பாதுகாப்பிற்காக முன்னிற்க வேண் டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தால் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. சுத்தி கரிக்கப்படாத எண்ணெய்க்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இறக்குமதி செய் யப்படும் எண்ணெய் இலங்கையில் சுத்திகரிக் கப்படுகிறது.

இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் போத்தலில் இலங்கையில் தயாரிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப் பட்ட எண்ணெய்யை எவ்வாறு இலங்கை தயாரிப்பு என்று கூற முடியும்? அவ்வாறெனில் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்ற எண்ணெய் யும் இலங்கையில் தயாரிக்கப்படும் எண்ணெய் யும் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

சுகாதார அமைச்சு, சுங்க திணைக்களம் மற் றும் நுகர்வோர் அதிகாரசபை என்பன இது தொடர்பில் பரிசோதித்திருக்கின்றனவா? சர்ச் சைக்குரிய எண்ணெய் சந்தைகளுக்கு விநியோ கிக்கப்பட்டிருக்குமாயின் அதற்கான பொறுப்பை யார் ஏற்பது? இலங்கையில் உற்பத்தி செய் யப்படுகின்ற தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாட்டவர்களுக்கு ஆரோக் கியமான எண்ணெய்யை வழங்குவதற்கு முன் னர் நாட்டு பிரஜைகளுக்கு அவற்றை வழங்கு மாறு வலியுறுத்துகின்றோம். சர்ச்சைக்குரிய எண்ணெயை இறக்குமதி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப் பது மாத்திரமின்றி இதனை மீள் ஏற்றுமதி செய்யாது அழிக்க வேண்டும். ஒரு சில நிமிடங்களில் 250 உயிர்க ளைப் பலியெடுத்த சஹ்ரானின் தீவிரவாத செயற்பாட்டைவிட இது மோசமான செயலாகும். வர்த்தகத்துறை அமைச்சர் பதவி விலக வேண்டிய நிலைமை நிச்சயம் ஏற்படும். அவ்வாறில்லை என்றால் அதனை வலியுறுத்தி மக்களின் சார்பில் நாம் குரல் கொடுப்போம். – என்றார்.

# பிணையில் விடுதலையான கல்கிஸையில் வாசி திடீர் சாவு

பிணையில் விடுவிக்கப்பட்ட நபரின் திடீர் மரணம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக ரொருவரின் தலைமையில் விசேட பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கல்கிஸ்ஸ பகுதியில் கடந்த மாதம் 18 ஆம் திகதி 50 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய் யப்பட்டிருந்தார்.

கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைக்கப்பட்ட அவர், மறுதினம் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் போது நீதிமன்றம் அவருக்கு 10 ஆயிரம் ரூபா பணத்தை அபரா தமாக செலுத்துமாறு உத்தர விட்டிருந்தது.

சந்தேக நபர் அந்த அபராத பணத்தை செலுத்தி விட்டு, அன் றைய தினமே நீதிமன்றத்திலி ருந்து வெளியேறியுள்ளார்.

இந்நிலையில் இவர் கடந்த மாதம் 21 ஆம் திகதி திடீரென சுகவீனமடைந்து களுபோவிலை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதுடன், நான்கு நாள்கள் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த மாதம் 25 ஆம் திகதியே இவர் வைத்தி யசாலையிலிருந்து வெளியேறி யுள்ளார்.

அதற்கமைய, மீண்டும் சுகவீ னமடைந்துள்ள அவர் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ள துடன், கடந்த செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் தொடர்பான பரிசோதனைகளை கல்கிஸ்ஸ நீதிவான் மேற்கொண் டுள்ளார்.

குறித்த மரணம் ஏதேனும் குற்றச் செயற்பாட்டின் காரண மாக இடம்பெற்றுள்ளதா என்பதை கண்டறிவதற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலை மையில் விசேட பொலிஸ் குழு வொன்று விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இந்நிலையில் மரண பரி சோதனைகள் இடம்பெறவுள் ளன. இதன்போது ஏதேனும் குற்றச் செயற்பாட்டின் காரண மாகவே மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தால் உரியதரப்பின ருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஒருகிலோவுக்கும் அதிக ஹெரோயின் மருதானைப் பகுதியில் மீட்கப்பட்டது!

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய சோதனையின்போது மருதானைப் பகுதியில் 1.78 கிலோ கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

மருதானை, லொக்கேட் பகுதியில் அமைந்துள்ள பாழடைந்த வீடொன்றிலேயே இந்த ஹெரோயின் தொகை மீட்கப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதியானது ஒரு கோடி ரூபாவுக் கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் தொடர்பான விவரங் கள் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# மூன்றாவது அலை தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது

## மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார் வைத்தியர் அசேல குணவர்தன

பொதுமக்களுக்கான சுகாதார வழி காட்டுதல்கள் நேற்று (வியாழக்கிழமை) வெளியிடப்பட்டன என சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேநேரம், நாட்டில் மூன்றாவது கொரோனா அலை ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

எனவே, புத்தாண்டு கொண்டாட்டங் களை சிறிய அளவில் முன்னெடுக் குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசியப் பற்றாளரின் மறைவு எமது சமூகத்துக்கு ஈடுசெய்யமுடியாதது

## சித்தார்த்தன் எம்.பி. இரங்கல்

மன்னாரின் முன்னாள் ஆயர் இராஜப்பு சின்னப்பு ஜோசெப் ஆண்டகையின் இழப்பு கத்தோலிக்க சமூகத்துக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்துக்கும் பேரிழப்பாகும் எனத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான புளொட்டின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயரான இராஜப்பு ஜோசெப் ஆண்டகையின் மறைவிற்கு விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அஞ்சலி குறிப்பில் –

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராஜப்பு ஜோசெப் ஆண்டகையின் இழப்பு கத்தோலிக்க சமூகத்திற்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

அவர் மிகப்பெரிய தமிழ்த் தேசிய பற்றாளராக சேவையாளராக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர்.

என்னுடன் தனிப்பட்ட முறையில் மிகநெருக்கமான உறவை வைத்திருந்தவர். நான் மன்னார் செல்லும் பொழுதெல்லாம் தவறாமல் அவரை சந்தித்தே வந்துள்ளேன்.

அவர் அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அபிவிருத்தி சம்பந்தமாகவும், தமிழ் தேசிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் என்னுடன் கலந்துரையாடுவார்.

அரசியல்ரீதியாக எங்களிற்குள் சில விடயங்களில் வெவ்வேறு பார்வைகள் இருந்திருந்தாலும், தமிழ்மக்களின் நலன் சார்ந்த விடயங்களில், அபிவிருத்தி விடயங்களில் அவருடன் ஒன்றுபட்டு செயற்பட்டு வந்தோம்.

1994 நாடாளுமன்றத்தின் வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராக செயற்பட்ட என்னிடம், வன்னி மாவட்ட மக்கள் நலன்சார்ந்த பிரச்சினைகளை, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் எடுத்து செல்லும்படி அவர் கேட்ட பல விடயங்களை நிறைவேற்றிருக்கிறேன்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக மேற்கொள்ள வேண்டிய பல சிபாரிசுகளை அவர் அடிக்கடி வழங்குவார். முக்கியமாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகளையே அவர் குறிப்பிடுவார். அவற்றை நான் நிறைவேற்றியிருக்கிறேன்.

இவருடைய இழப்பு கத்தோலிக்க சமூகத்தினருக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் அனைவருக்கும் பேரிழப்பாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆயருக்கு ரெலோ யாழில் அஞ்சலி





மறைந்த கலாநிதி இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடலுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் யாழில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொரிய கோவிலில் மக்கள் அஞ்சலிக்காக ஆண்டகையின் திருவுடல் யாழ் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை கட்சியின் தலைவர் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த கட்சியின் முக்கியஸ்தர்கள் சுகாதார மட்டுப்பாடுகளுடன் அஞ்சலி செலுத்தினர்.

# ஆயரின் திருப்பலி ஒப்புக்கொடுக்கும்நாள் துக்க நாளாக அனுஷ்டிக்கப்படல் வேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் பிரதமரிடம் கோரிக்கை

மறைந்த முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் அடக்கம் செய்யும் நாளை துக்க நாளாக அரசு அறிவிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம், எதிர்வரும் திங்கட்கிழமை வரை தமிழர்கள் அனைவரும் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு துக்க தினம் அனுஷ்டிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு இராயப்பு ஜோசப் ஆண்டகை, யுத்த காலத்தில் இன, மத , மொழி பேதம் பாராமல் மனிதம் மட்டுமே மேன்மை எனக் கருதி அனைத்து மக்களுக்குமான சேவைகளை வழங்கியவர். அவரது இழப்பு எமது தமிழ் சமூகத்திற்கு பேரிழப்பாக அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்காக அயராது பாடுபட்டவர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் அரசியல் கைதிகளுக்காகவும் ஓடி ஓடி உழைத்தவர்.

தமிழ் மக்கள் அனைவரும் நிம்மதியாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமென்பதில் உறுதியான பற்றோடு இருந்தவர் எனவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

எனவே ஆயரின் ஆன்மா சாந்தி அடைவதற்காக அனைத்து மக்களின் வீடுகளிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு மூன்று நாள்கள் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும்.

இதேவேளை, மன்னார் ஆண்டகையின் இறுதி நல்லடக்க நாளான திங்கட்கிழமையை துக்க நாளாக அறிவிக்கும்படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன் எனவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

### மேலும் நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

31 மற்றும் 32 வயதுடைய இவர்கள் இருவரும் வெல்லப்பிட்டியவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

இவர்கள் கட்டாரில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் என்றும், அங்கிருந்துகொண்டு 'வன் உம்மா' என்ற பெயரில் 'வட்ஸ் அப்' குழுவொன்றின் ஊடாக அடிப்படை வாதத் தகவல்களை பரப்பி வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மூதூர் பிரதேசத்தில் அடிப்படைவாத வகுப்புகளை நடத்தி சென்றனர் என்று 37 மற்றும் 38 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக கைது செய்யப்பட்ட நான்கு பேரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மரியசேவியர்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1990 ஆம் ஆண்டு கலைமுகம் என்னும் காலாண்டுக் கலை இலக்கிய இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் சிறிது காலம் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

பன்மொழிப்புலமை பெற்றிருந்த அடிகளார் ஆங்கிலத்தில் Cathalic - Hindu Encounter, Jaffna: The Land of the Lute, Siddhanta Tradition's Philo - sopher Sages, Life and Times of Orazio Bettachini ஆகிய நூல்களையும் ஜேர்மன் மொழியில் Die Mentaphysik-des shaiva siddhanta என்ற நூலையும் அளவுகோல், கதையும் காவியமும், ஒரு துளி, கபடமனக் காவலன், எழுதிய கரம் முதலான நாடகங்களையும் அருளும் இருளும் என்ற நடன நாடகத்தையும் மூவேந்தர், சிங்க குலச் செங்கோல் ஆகிய நாட்டுக் கூத்துக்களையும் கலைமுகம் என்ற கட்டுரைத்தொகுப்பையும் சுவைத்தேன் என்ற கவிதைத் தொகுப்பையும் ஆக்கியளித்துள்ளார்.

இவருக்கு இவரது சமய, கலைப் பணிகளைப் பாராட்டி 1997 ஆம் ஆண்டு ஜேர்மனி கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார் பொன்னாடை அணிவித்துக் கலைத் தூது என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். மேலும் இவரின் இவருக்கு ஆளுநர் விருதும் யாழ். பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டமும் அளித்துள்ளது.







விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் -076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org